விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 15 வெள்ளிக்கிழமை (29.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

## யாழ்ப்பாண மாவட்ட குடிநீர் தேவையை நிறைவு செய்ய

### இரண்டாயிரம் மில்லியன் செலவில் வடமராட்சியில் பாரிய நீர்ப்பாசனக்குளம்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முற்று முழுதாக நிறைவு செய்யும் நோக்கில் ரூபாய் 2 ஆயிரம் மில்லியன் செலவில் 24 மில்லியன் கனமீற்றர் (24mcm x109L)க்கு அதிகமான மழை நீரைத் 24

## திருக்கேதீஸ்வர ஆலய வளைவு உடைக்கப்பட்டமையை கண்டித்து

### இந்து மக்களால் மன்னாரில் நேற்று கவனயீர்ப்பு



(மன்னார்)

மன்னர் - திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் அலங்கார வளைவு அப்புறப்படுத்தப்பட்டமை மற்றும் நந்திக்கொடியை காலால் மிதித்து இந்து மதத்தை அவமதித்தமையைக் கண்டித்து நேற்று 24

## அரசியலமைப்பின் தடைகளை அகற்றி

# தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

### சபையில் இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு) புதிய அரசியலமைப்பு வேலைத்திட்டத்தில் சில தடைகள் காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இத்தடைகளை அகற்றி தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (23-ம் பக்.)

## O/L பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகின

### 9,413 பேருக்கு 9 'ஏ' சித்தி

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இரவு 8:30க்கு வெளியிடப்பட்டது.

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9 ஆயிரத்து 413 பேர். ஒன்பது 23

### வடக்கு - கிழக்கு மாணவர்கள்

## முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடிக்கவில்லை!

(கொழும்பு)

2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றவர்களில் முதல் பத்து இடங்களுக்குள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த எந்தவொரு 23


## வேம்படியில் 50 பேர் இந்துவில் 35 பேர் 9A

(யாழ்ப்பாணம்)

நேற்று வெளியிடப்பட்டுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 50 மாணவிகள் 9 ஏ சித்தி பெற்றுள்ளதுடன் 49 மாணவிகள் 8 ஏ சித்தியும் பெற்றுள்ளனர்.

மேலும் யாழ். இந்துக் கல்லூரியில் 35 மாணவர்கள் 9 ஏ பெற்றதுடன், 42 மாணவர்கள் 8 ஏ சித்தியும் பெற்றுள்ளனர். 24

### அன்பு வாசகர்களே...



கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு புருசோத்தமன் எழுதும் கடிதம் இன்றைய வலம்புரியில்... வாசிக்கத் தவறாதீர்கள்...!

### அமைச்சுக்கள் மீதான வாக்கெடுப்பு தோல்வி

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் முதலாவது பௌத்த மாநாடு இன்று வவுனியாவில் ஆரம்பம்

### ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலாவது பௌத்த மாநாடு இன்று வெள்ளிக்கிழமை வவுனியா ஸ்ரீபோதி தட்சிணாராம விகாரையில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன என்று மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வட,கிழக்கு இரு மாகாணங்களின் பிரதம சங்கைக்குரிய நாயக்கர், வவுனியா மாவட்ட தலைவர் பூஜ்ஜிய சியம்பலா கஸ்வெள விமலசார தேரர், புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா மற்றும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் தலைமையில் இந்த பௌத்த 24

### கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ம் ஆண்டு சித்தி வீதம் சரிவு

(கொழும்பு)

2017ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2017ஆண்டு பரீட்சைக்குத் 24

### சவால்களை வெற்றி கொள்ள

## அரச சேவையில் முக்கிய மாற்றம்

### - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

நாட்டின் முன்னுள்ள சாவல்களை வெற்றி கொள்வதற்கு அரச சேவையில் முக்கிய மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்காக புதிய தொலைநோக்குடன் புதிய திட்டங்களை வகிக்க வேண்டியது மிகவும் அவசியமும் 23

## வறட்சி காரணமாக 44 ஆயிரம் பேர் பாதிப்பு

### நீர்மின் உற்பத்தியும் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் 7 மாவட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வறட்சியான காலநிலை காரணமாக 12 ஆயிரத்து 632 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனை தெரிவித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. 23

### ஆளுநர் மூலமான ஆட்சி

## ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடு

### - இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு , கிழக்கு மாகாணங்களில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அங்கு ஆளுநர் மூலமாக ஆட்சியை நடத்துவது ஜனநாயக செயற்பாடு அல்ல என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 23

# பாராட்டி வாழ்த்துகிறோம்

## தேசிய உற்பத்தி திறன் விருதுகள் – 2018



தேசிய ரீதியில் 1ஆம் இடம்பெற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை தேடித்தந்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அரச உத்தியோகத்தர்களையும் மன தார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கிளிநொச்சி வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கம்**
**கிளிநொச்சி.**

(C-5907)


# நீராவியடி ஆலய வளாகத்தில் விகாரை அமைத்த வழக்கு

## 22ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் கோயிலை அபகரித்து விகாரை அமைத்த பௌத்த பிக்கு நோய் வாய்ப்பட்டநிலையில் அவர் நீதிமன்றில் ஆஜராகாததால் வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீரா வியடி பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து தொல்பொருள் இடமாக பிரகடனப்படுத்திய துடன் குருகந்த ரஜமஹா விகாரையையும், பிரமாண்ட புத்தர் சிலையையும் அமைத் துள்ள பிக்கு நோய்வாய்ப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக குறித்த பிக்கு நீதி மன்றில் ஆஜராக முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

இதனிடையே குறித்த ஆலயம் தொடர் பான வழக்கு நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலை யில் இடம்பெற்றது.

இவ்வழக்கு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்த நிலையில் பௌத்த 'பிக்கு சார்பில் ஆஜரான சட்டத்தரணி, குறித்த வழக்கின் ஒருதரப்பான பௌத்த பிக்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சிகிச்சைக்கு சென்றுள்ளதன் காரணமாக மன்றில் ஆஜராக முடியவில்லை எனவும் மன்றில் தெரிவித்தார்.

இந்நிலையில் இருதரப்பு வாதங்களை யும் செவிமடுத்த நீதிபதி வழக்கின் மீதான தீர்ப்பை வரும் ஏப்ரல் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார். (ம-281)

# புலமைப்பரிசில் பரீட்சையை

## இரத்துச் செய்ய முடியாது – கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட் சையை இடைநிறுத்துவதற்கு முன்னர், அதற்கு உரிய தயார்ப்படுத்தலை மேற் கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள் ளார்.

கொழும்பு மாநகர சபை மைதானத்தில் கண்காணிப்பு செய்யும் நடவடிக்கைக்காக சென்றிருந்த அமைச்சர், அங்கு செய்தியாளர் களிடம் இதனைக் கூறியுள்ளார்.

இதற்கு உரிய ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளாமல் அதனை இரத்து செய்ய முடியாது என்று கல்வி அமைச்சர் தெரிவித் துள்ளார். (ம-3)


### வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர் மற்றும் அதனை அண் மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

(8267) **071 093 8967**

### பெண் உதவியாளர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந் துள்ள மூக்குக்கண்ணாடி ஸ்தாபனத் துக்கு பெண் உதவியாளர் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் மட்டும். (8264)

**தொடர்புகளுக்கு : 021 222 7893**



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் பின்வரும் கால்நடைகள் 04.04.2019 அன்று வியாழக்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆடுகள் :-**

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 4303-0919-0011 | ஜமுனாபாரி கலப்பு | 4.5 வருடங்கள் | கடா |
| 4303-0919-0022 | ஜமுனாபாரி கலப்பு | 3.5 வருடங்கள் | கடா |
| 4303-0919-0026 | ஜமுனாபாரி கலப்பு | 03 வருடங்கள் | கடா |
| 4303-0919-0029 | ஜமுனாபாரி கலப்பு | 03 வருடங்கள் | கடா |
| 4303-0919-0041 | ஜமுனாபாரி கலப்பு | 2.5 வருடங்கள் | கடா |
| 4303-0919-0047 | உள்ளூர் | 2.5 வருடங்கள் | கடா |
| 4303-0919-0052 | உள்ளூர் | 02 வருடங்கள் | கடா |
| 4303-0919-0053 | உள்ளூர் | 02 வருடங்கள் | கடா |
| 4303-0919-0058 | உள்ளூர் | 02 வருடங்கள் | கடா |
| 4303-0919-0012 | ஜமுனாபாரி கலப்பு | 04 வருடங்கள் | மறி |
| 4303-0919-0025 | உள்ளூர் | 3.5 வருடங்கள் | மறி |

**மாடுகள் :-**

| அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன்/பசு |
|---|---|---|---|
| 4303-0919-0005 | ஜேர்சி கலப்பு | 10வருடங்கள் | பசு |
| 4303-0919-0014 | ஜேர்சி கலப்பு | 08 வருடங்கள் | பசு |
| 4303-0919-0032 | ஜேர்சி கலப்பு | 03 வருடங்கள் | பசு |
| 4303-0919-0012 | பிறிசியன் கலப்பு | 11 வருடங்கள் | பசு |
| 4303-0919-0008 | ஜேர்சி கலப்பு | 10 வருடங்கள் | பசு |
| 4303-0919-0017 | ஜேர்சி கலப்பு | 04 வருடங்கள் | நாம்பன் |
| 4303-0919-0038 | ஜேர்சி கலப்பு | 03 வருடங்கள் | நாம்பன் |
| 4303-0919-0039 | ஜேர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | நாம்பன் |
| 4303-0919-0040 | ஜேர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | நாம்பன் |
| 4303-0919-0043 | ஜேர்சி கலப்பு | 02 வருடங்கள் | நாம்பன் |
| 4303-0919-0048 | ஜேர்சி கலப்பு | 1.5 வருடங்கள் | நாம்பன் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 03.04.2019 (புதன்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏலவிற்பனையானது 04.04.2019 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடை களுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

**பதிவாளர்** (C-5901)



# மரண அறிவித்தல்

## நடேசு சிவநாதன்

(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர், முல்லைத்தீவு)



கணுக்கேணி மேற் கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடேசு சிவநாதன் புதன் கிழமை (27.03.2019) அன்று இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான நடேசு - சுந்தரம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், கதிரவேற்பிள்ளை-பதஞ்சலி (பரிமளம்) ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திர காந்தாவின் அன்புக் கண வரும், கைலைநாதன் (Aus), காலஞ்சென்ற கதிர்காம நாதன் (Aus), இராமநாதன், மகாலட்சுமி (Aus), காலஞ்சென்ற குகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமுதா (UK), பகுறுளி (UK), பரிமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், திலீபன் (UK), மகேஸ்வரன் (UK), திலீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதனா, நிஸ்விதன், நிர்மிகன், கம்சிகன், ஷகிந், நேஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (31.03.2019) அன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவடிப்பிலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கணுக்கேணி மேற்கு.** (C-5905) **தகவல் : குடும்பத்தினர்**

## சிதைந்துபோன இனத்திற்கு இரட்சகர் வந்துவிட்டார்

# கோத்தபாயவே இறுதி பேருந்து; தவறவிட்டால் எப்போதும் செல்ல முடியாது - உதய கம்மன்பில

(ஹோமாகம)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரே இறுதிப் பேருந்து. அதில் ஏறவில்லை என்றால், எப்போதும் எதிர்பார்த்த பயணத்தை மேற்கொள்ள முடியாது என பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நேற்று நடைபெற்ற கட்சியின் கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.


எதிர்பார்ப்பு சிதைந்து போன இனத்திற்கு புதிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இரட்சகர் வந்துவிட்டார் என்ற செய்தி இரண்டு செவிகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது.

இதனால், இன, மத, கட்சி பேதமின்றி அனைத்துத் தரப்பிலும் இருந்து கோத்தா, கோத்தா என்ற குரல் ஒலித்து வருகிறது. இதுதான் இறுதிப் பேருந்து. இந்தப் பேருந்தில் ஏறாவிட்டால், எமது பயணத்தை எப்போதும் மேற்கொள்ள முடியாது போகும்.

தாய்நாட்டை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால், எமது பிள்ளைகளுக்கு நாடு மீதமிருக்க வேண்டுமாயின், வாழ்நாள் முழுவதும் அமைதியாக அழகான நாட்டில் வாழ வேண்டும் என்றால், தாய் நாட்டுக்கான சுதந்திரப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள்.

இது எமது தாய்நாட்டை மீண்டும் போர்க் களத்திற்கு அழைத்துச் செல்லும் தருணம். அன்று எமது இளைஞர்கள் வடக்கிற்குச் சென்று போரிட்ட போது





எம்மால் போர்க் களத்திற்கு செல்ல முடியவில்லை. தற்போது போர்க் களத்திற்கு செல்லும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. அது அடுத்த ஆறு மாதங்களில் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல்.

இம்முறை எமது போர்க்களம் ஜனாதிபதித் தேர்தல் களம். நாம் துப்பாக்கிகளுடன் அங்கு செல்லப் போவதில்லை. அறிவார்ந்த ஆயுதத்துடன் இந்தப் போர்க் களத்திற்குச் செல்லப் போகின்றோம் எனவும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

## தொழிலாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

### அமைச்சரவை அங்கீகாரம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளொன்றுக்கான கொடுப்பனவாக 750 ரூபாவை வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டிருந்தது.

எனினும் இந்தச் சம்பள அதிகரிப்பு போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து பெருந்தோட்டங்களில் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதன் காரணமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் மலையகப்பிரதிநிதிகளின் தலையீட்டினால் 750 ரூபா அடிப்படை சம்பளத்துடன் ஒருவருடத்திற்கு 50 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அந்த தீர்மானத்திற்கு அமைய 50 ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்வதற்காக பெருந்தோட்ட தொழிற்றுறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# மக்களின் சொத்துக்களை சூறையாடிய ஜனாதிபதிகள்

(கொழும்பு)

இந்நாட்டின் மூன்று ஜனாதிபதிகள் மக்கள் சொத்துக்களைச் சூறையாடியுள்ளனர் எனக் குற்றம்சாட்டிய ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தால் ஆதாரங்களை வெளியிடத் தயாரெனவும் தெரிவித்தார்.

இது குறித்து அநுர மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் மேடைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறும்போது, அவரின் பின்னால் மகிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் எனவும் அவர்களுக்கு எதிராக மோசடி வழக்குகள் உள்ளன என்றும் தெரிவித்தார்.

எனவே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஊழல் ஒழிப்புப் பற்றிப் பேசும் தகுதி இல்லை என சாடிய அவர், மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே ஊழல் இல்லாத கட்சி எனவும் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி, பிரதமர் என்ற பதவிகள் ஊழல் மோசடிகளுக்கான அனுமதிப்பத்திரம் என தெரிவித்த அவர், அமைச்சுப் பதவிகள் மக்கள் சொத்துக்களைச் சூறையாடுவதற்கான அனுமதிப்பத்திரம் எனவும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட மூவரும் மக்கள் சொத்துக்களைச் சூறையாடியுள்ளனர் எனவும் சாடினார். (இ-7)

# தரம் 13 வரை கட்டாயக் கல்வியை தொடரும் மாணவர்களுக்கு இனி விசேட கொடுப்பனவு

## அமைச்சரவை அங்கீகாரம்



(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 13 வரையிலான கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை ஊடாக நிறுவனப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குதல் குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தரம் 13 வரை உறுதி செய்யப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் தொழில் கற்கைநெறியை தொடரும் மாணவர்கள் 2 ஆம் கல்வி ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தொழில் விடயத்துக்கான தேசிய தொழில் ஆற்றல் (NVQ) 4 மட்ட சான்றிதழை வழங்குவதற்கு அனுமதியுள்ள தொழில் பயிற்சி நிறுவனத்தில் கல்வியைப் பெற வேண்டியுள்ளது.

இவ்வாறான தொழில் பயிற்சி நிறுவனங்கள் பல முக்கிய நகரங்களில் அமைந்துள்ளமை மற்றும் சில பயிற்சி நிறுவனம் ஒரு இடத்தில் மாத்திரம் அமைந்திருப்பதன் காரணமாக சில மாணவர்கள் போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிக தொகையைச் செலவிடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை ஊடாக நிறுவனப்படுத்தப்பட்டுள்ள மாணவர்களுக்கு போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்காக நாளாந்தம் 500 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்காக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யுத்தத்தால் இழந்த சொத்துக்களை மீளப்பெற சட்டத்தில் திருத்தம்

## தலதாவின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி

(கொழும்பு)

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் காணி உள்ளிட்ட பிரத்தியேக சொத்துக்களை இழந்து அதை நீதிமன்றத்தினூடாக மீளப்பெற்றுக் கொள்ளும் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமல்போன நபர்களுக்கு உடனடி வசதிகளை செய்யும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு இல. 5 இன் கீழான நிவாரண கால (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம் பலப்படுத்தப்படவுள்ளது.

நிவாரணகால சட்டத்தின் மூலம் பயனடையாத நபர்கள் கால எல்லை கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு உட்படுத்தப்படுவர்.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நாளிலிருந்து 2 வருட



காலத்துக்குள் நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்வதற்குப் பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

வழக்கைத் தாக்கல் செய்வதற்காக மோதல் நிலவிய காலப் பகுதியில் காணாமல் போன ஆவணங்களை மீளத் தயாரிப்பதற்கு அல்லது காணிகளின் உரிமை தொடர்பில் சம்பந்தப்பட்ட சாட்சியங்களைத் திரட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெளிவுபடுத்த கால அவகாசம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதன் காரணமாக இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தை மேலும் 3 வருடங்களுக்கு நீடிப்பதற்காக கால அவகாசம் (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தை மீள அமுல்படுத்த சட்ட திருத்தத்தை மேற்கொள்ள நீதி மன்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (இ-7)

# ஆளுநர்-ஆயர் சந்திப்பு



**யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று முற்பகல் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (இ-7)**




# மும்பை நோ போல் வெற்றி

## ஐ.பி.எல்., தொடரில் இன்னொரு சர்ச்சை


மிட் விக்கெட் திசையினூடாக பந்தை விரட்டும் பெங்களூரின் டிவில்லியர்ஸ்

பரபரப்பான ஐ.பி. எல்., தொடர் லீக் போட்டியில் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. 'நோ போலாக' வீசப்பட்ட கடைசி பந்தை நடுவர் கண்டு கொள்ளாதது மும்பைக்கு சாதகமாக அமைந்தது.

இந்தியாவில், ஐ.பி.எல்., தொடரின் 12 ஆவது சீசன் நடக்கிறது. பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதா னத்தில் நடந்த லீக் போட்டி யில் பெங்களூரு, மும்பை அணிகள் மோதின. பெங்களூரு அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. மும்பை அணியில் பென் கட்டிங், ரஷிக் சலாம் நீக்கப்பட்டு லசித் மலிங்க, மயாங்க் மார்கண்டே சேர்க்கப்பட்டனர். நாணயச்சுழற்சியல் வென்ற பெங்களூர் அணித் தலைவர் ஹோலி, களத்தடுப்பை' தேர்வு செய்தார்.

**சுப்பர் ஆரம்பம்**

மும்பை அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, குயின்ரன் டி கொக் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. உமேஷ் யாதவ், நவ்தீப் சைனி வீசிய முதலிரண்டு ஓவரில் தலா 2 பவுண்டரி அடித்த ரோகித், சைனி வீசிய 4வது ஓவரில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். மறுமுனையில் ஒத்துழைப்புக் கொடுத்த குயின்ரன், மொஹமட் சிராஜ் பந்தை சிக்சருக்கு அனுப்பினார். முதல் விக்கெட்டுக்காக 54 ஓட்., சேர்த்த போது யுவேந்திர சகால் 'சுழலில்' குயின்ரன் (23) போல்டானார். சகால், கிராண்ட்ஹோம் பந்தில் தலா ஒரு பவுண்டரி விளாசிய ரோகித் (48), உமேஷ் 'வேகத்தில்' வெளியேறினார்.

**சகால் அசத்தல்**

அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ், மொயீன் அலி வீசிய 13வது ஓவரில் தொடர்ச்சி யாக ஒரு சிக்சர், ஒரு பவுண் டரி அடித்தார். சகால் வீசிய 14வது ஓவரின் முதல் மூன்று பந்தை சிக்சருக்கு அனுப்பிய யுவராஜ் (23), 4வது பந்தில் அவுட்டானார். பொறுப்பாக விளை யாடிய சூர்யகுமார், கிராண்ட்ஹோம் வீசிய 15வது ஓவரில் அடுத்தடுத்து 2 பவுண்டரி விரட்டினார். ஆட்டத்தின் 16 வது ஓவரை வீசிய சகால் 'சுழலில்' சூர்ய குமார் (38), பொலார்ட் (5) சிக்கினர்.

உமேஷ் பந்தில் குர்னால் பாண்ட்யா (1) 'பெவிலியன்' திரும்பினார். மயாங்க் மார்கண்டே (6) நிலைக்கவில்லை. சைனி வீசிய 19வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த ஹர்த்திக் பாண்ட்யா, சிராஜ் வீசிய கடைசி ஓவரில் 2 சிக்சர் விளாசினார்.

மும்பை 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்கள் எடுத்தது. ஹர்திக் பாண்ட்யா (32), பும்ரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**டி வில்லியர்ஸ் அபாரம்**

சவாலான இலக்கை விரட்டிய பெங்களூர் அணிக்கு மொயீன் அலி (13) ஏமாற்றினார். பும்ரா வீசிய 4வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசினார் ஹோலி. குர்னால் பாண்ட்யா வீசிய 6வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த பார்த்திவ் படேல் (31), மார்கண்டே பந்தில் போல்டானார். பும்ரா வேகத்தில் ஹோலி (46) வெளியேறினார்.

ஹர்திக் பாண்ட்யா வீசிய 15வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த டி வில்லியர்ஸ், மலிங்கா வீசிய 16வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். ஹெட்மயர் (5) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய டிவிலியர்ஸ், 29வது அரை சதமடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், ஹர்திக் பாண்ட்யா வீசிய 18வது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். கடைசி ஓவரில் பெங்களூர் வெற்றிக்கு 17 ஓட். தேவைப்பட்டது. மலிங்க வீசிய 20வது ஓவரின் முதல் பந்தில் ஷிவம் துபே சிக்சர் அடித்தார். கடைசி 2 பந்தில் 8 ஓட்டம் தேவைப்பட்ட நிலையில் ஒரு ஓட்டம் மட்டுமே கிடைத்தது. பெங்களூர் 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 181 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

# நன்றி சொல்லி பாடுவேன்...

## அன்ரோ ரசல் உற்சாகம்

"ஐ.பி.எல்., போட்டியில் களத்தடுப்பில் தவறு செய்த பஞ்சாப் அணி வீரருக்கு நன்றி சொல்ல வேண்டும். இதனால்தான் தப்பினேன்," என, கொல்கத்தா வீரர் ஆன்ட்ரே ரசல் தெரிவித்தார்.

ஐ.பி.எல்., தொடரின் லீக் போட்டிகள் தற்போது நடக்கிறது. கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கொல்கத்தா (218/4) 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை (190/4) வீழ்த்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியின் ரசல் 3 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, ஷமி பந்தில் போல்டானார். ஆனால், உள்வட்டத்திற்குள் 4 பேருக்குப் பதில் 3 களத்தடுப்பாளர்கள் மட்டுமே நின்றது தெரிய வர, நடுவர் 'நோ போல்' கொடுத்தார். இதில் தப்பிய ரசல் 48 ஓட்டங்கள் விளாசினார்.

**முந்துவார் கெய்ல்**

இது குறித்து கொல்கத்தாவின் ரசல் கூறுகையில்," பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் ஷமி பந்தில் போல்டானேன். அப்போது, இது 'நோ போலாக' இருக்கக்கூடாதா என கடவுளிடம் வேண்டினேன். எதிர்பாராதவிதமாக, உள்வட்டத்திற்குள் ஒரு களத்தடுப்பாளர் மட்டும் இல்லை. இதனால், 'நோ போல்' என அறிவிக்க எதிர்பார்த்தபடியே தப்பினேன். இதற்கு அந்த களத்தடுப்பாளருக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். இவரது பெயர் மறந்துவிட்டது. அடுத்து பஞ்சாப் வீரர் கெய்லை எப்படியும் கட்டுப்படுத்த வேண்டும் என திட்டமிட்டோம். கடைசியில் இவர் எனது பந்திலேயே ஆட்டமிழந்துவிட்டார். கெய்ல் எனது சகோதரர் போன்றவர். நான் எத்தனை சிக்சர் அடித்தாலும், இதை அனைத்தையும் முறியடிக்கும் திறமை அவரிடம் உள்ளது," என்றார்.

**மிகப்பெரிய விலை**

பஞ்சாப் அணியின் தலைவர் அஷ்வின் கூறுகையில், "உள்வட்டத்திற்குள் நான்கு களத்தடுப்பாளர்கள் நின்று கொள்வார்கள் என நினைத்தேன். ஆனால், இளம் வீரர்கள் என்பதால் இவர்களை குறை சொல்ல முடியாது. சின்ன விடயத்தில் கோட்டைவிட்டதற்கு மிகப்பெரிய விலை கொடுத்துவிட்டோம். எதிர் வரும் போட்டியில் இம்மாதிரியான 'களத்தடுப்பில்' கவனம் செலுத்துவோம்," என்றார்.




# முதல் வெற்றி யாருக்கு?

## ராஜஸ்தான் - ஹைதராபாத் காத்திருப்பு

ஐ.பி.எல்., தொடரில் இன்று நடக்கும் லீக் போட்டியில் ராஜஸ்தான், ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

இந்தியாவில் பிரிமியர் தொடரின் 12வது சீசன் நடக்கிறது. இதில் இன்று ஹைதராபாத்தில் நடக்கும் லீக் போட்டியில் முதல் போட்டியில் தோல்வியடைந்த ராஜஸ்தான், ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன. பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 185 ஓட்டங்கள் என்ற இலக்கை 'சேஸ்' செய்த போது ராஜஸ்தான் வீரர் பட்லர் 'மன்கேடிங்' முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் அடுத்து வந்த வீரர்கள் வரிசையாக ஆட்டமிழக்க, கடைசியில் தோற்க நேரிட்டது. இன்று அணித் தலைவர் ரகானே, சஞ்சு சாம்சன் உள்ளிட்டோர் சுதாகரித்துக் கொண்டால் நல்லது. உலக கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற திட்டமிட்டுள்ள முன்னாள் அணித் தலைவர் 'சீனியர்' ஸ்மித், அதிக ஓட்டங்கள் விளாச வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பந்துவீச்சில் ஜோப்ரா ஆர்ச்சர் நம்பிக்கை கொடுக்கிறார். மற்றபடி குல்கர்னி, கிருஷ்ணப்பா கௌதம், ஸ்ரோக்ஸ் ஓட்டங்களை வாரி வழங்குகின்றனர். உனத் கட்டும் சொதப்புகிறார்.

**வோர்னர் பலம்**

ஹைதராபாத் அணிக்கு டேவிட் வோர்னர், பேர்ஸ்டோவ் கூட்டணி மிரட்டலான ஆரம்பம் கொடுக்கிறது. தமிழகத்தின் விஜய் சங்கர் தனது வழக்கமான அதிரடி ஓட்டக்குவிப்பை கொடுக்கிறார். துடுப்பாட்டம் பலமாக இருந்தாலும், அணியின் பந்து வீச்சு பலவீனமாக உள்ளது. புவனேஷ்வர் குமார், சகிப் அல் ஹசன் மற்றும் சந்தீப் சர்மா என ஒருவரும் கைகொடுக்காதது ஏமாற்றம் தான். இரு அணிகளும் முதல் போட்டியில் தோற்றதால், இன்று முதல் வெற்றி யாருக்கு என பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பாராட்டி
வாழ்த்துகின்றோம்
தேசிய உற்பத்தி திறன் விருதுகள் - 2018



தேசிய ரீதியில் 1ம் இடத்தைப் பெற்று
கிளிநொச்சி மாவட்டத்துக்கு பெருமை
தேடித்தந்த கிளிநொச்சி மாவட்ட
அரசாங்க அதிபர் மற்றும்
அரச உத்தியோகத்தர்களையும்
மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பிரஜைகள் குழு
கிளிநொச்சி மாவட்டம்
(C-5906)

# திரு. கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்

## அவர்களின் மணிவிழா வாழ்த்து

## 29.03.2019



### ஆசிச் செய்தி

நல்லதொரு ஆசிரிய பரம்பரையை உருவாக்கி ஈழவள நாட்டின் நாற்புறமும் பணியாற்ற வைத்த பெருமைக்குரிய கலாநிதி S. அமிர்தலிங்கத்திற்கு மணி விழா எடுப்பது சாலவும் பொருந்துமே. பண்பான, சமயப்பற்றான, ஒழுக்கமான ஆசிரியர்களை உருவாக்குவதில் கல்வியியற் கல்லூரிகளுக்கு பெரும் பங்குண்டு. அறிவுத் தேடலுக்கு விருந்தளித்திடும் கல்விக் கல்லூரியின் முதல்வராக ஆறு ஆண்டுகளும் ஆசிரியராக பன்னிரண்டு ஆண்டுகளும் விரிவுரையாளராக ஒரு தசாப்த காலமும் உப மேலதிக முதல்வராக ஆறு ஆண்டுகளும் அளப்பரிய பணிகளாற்றிய விழாநாயகன் தொடர்ந்து தனது அறிவாற்றலை சமூகத்திற்கு வழங்க வேண்டும். இவரது சேவையை கௌரவிப்பதில் மகிழ்வடைவதுடன் நீண்ட ஆயுளும் நீடித்த சுகத்தையும் இறைவன் வழங்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

என்றும் வேண்டுவது இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



### Congratulatory Message from Chief Commissioner of Teacher Education

Unique and memorable happy retirement wishes for Dr.Sathasivam Amirthalingam the President of Jaffna National College of Education. You have been a great asset to the field of teacher education and we will miss you very much. You have rendered en ardent service as the president of Jaffna National College of Education for the last six years in professional teachers with discipline, dedication and duty conscious. Great effort has been taken to provide first - hand experience needed for teachers through making activities of stipulated for trainees of college of education as Lecturer, vice president and president for the long 23 years.

Retirement is the beginning of life not the end. Congratulations the on the end of your Servitude!

**K.M.H. Bandara**
**Chief Commissioner (Teachers Education)**
**Ministry Of Education Isurupaya, Battaramulla.**



### அறுபது வயது தாண்டிய இருபது வயது இளைஞனின் வாழ்த்துச் செய்தி

இன்று மணிவிழாக் காணும் நண்பன் சதாசிவம் அமிர்தலிங்கத்துடன் எனக்குள்ள உறவும், நட்பும் முப்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்தவை. அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சாலை மாணவர்களாக கல்வி கற்ற காலத்தில் ஏற்பட்ட பந்தம். பல்கலைக்கழக மாணவர்கள் என்ற நிலையில் கலை, விஞ்ஞானம் என்ற பாகுபாடு பார்க்கப்படாத அன்றைய காலகட்டத்தில் ஏற்பட்ட மாணவ உறவு இன்றுவரை தொடர்கிறது. சரவணை என்ற குக்கிராமத்தில் சதாசிவம் மகேஸ்வரி தம்பதிகளின் தவப்புதல்வனாக 1959 ஆம் ஆண்டு அவதரித்த நண்பன் அமிர்தலிங்கம் கடின உழைப்பால், விடாமுயற்சியால் கல்விப்புலத்தின் உச்சியைத்தொட்ட எனது நண்பர்களில் ஒருவர். அச்சாதனைகளுக்காக அவருக்கு கொடுக்கப்படும் கௌரவமாகவே இன்றைய மணிவிழாவைப் பார்க்கின்றேன். அவர் கல்விப் பணிதொடர இறையருள் துணைநிற்பதாக.

**சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். திருவாளர் சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தினைப் பெற்றுக் கொண்டவர். முதுவிஞ்ஞானமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி எனப் பல உயரிய பட்டங்களைப் பெற்றவர். ஆசிரியர் சேவையில் பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்பான சேவையை வழங்கியதோடு சிரேஷ்ட விரிவுரையாளர், உப பீடாதிபதி மற்றும் பீடாதிபதியாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறந்த சேவையை ஆற்றியவர்.

சிறந்த கல்வியியலாளருக்கு மணிவிழா எடுப்பது பொருத்தமானது. இதனை செயற்படுத்தி மகிழும் மணிவிழாச் சபையினரையும் பாராட்டி சிறந்த தேகாரோக்கியத்துடன் கல்விப் புலத்திற்கு மேலும் பல சேவைகளை வழங்க எல்லாம் வல்ல இறை பரம்பொருளின் திருப்பாதங்களை பணிந்து மலரும் மணிவிழா மலர் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**நா. வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



### புதிதாக பதவியேற்கும் பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

மணிவிழா காணும் கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தரமான ஆசிரியர் கல்வியின் மூலம் தரமான ஆசிரியர்களை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட மணிவிழாநாயகன் அவர்களின் தொழில்சார் வளர்ச்சியே அவரின் ஆசிரியத்துவத்திற்கு முன்னுதாரணமாகும். தனது கல்லூரி நலனில் கொண்ட அக்கறை காரணமாக பல சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. எனினும் தனது வலுவாண்மை காரணமாக அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு கண்ணியத்துடனும் பொறுப்புடனும் கடமையாற்றி ஓய்வு பெறும் கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்கள் கல்விப்பணியில் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுடன் ஆசிரிய கல்வித்துறைக்கும் கல்விப்புலத்திற்கும் சேவையாற்ற வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

தனிமனித தேவைகளுக்கு அப்பால் சமூகத்தின் தேவையை தனதாக்கிக் கொண்டு செயற்படுபவர்தான் வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுவார்கள். அந்த வகையில் கலாநிதி ச.அமிர்தலிங்கத்தின் சேவைகளும் அடையாளப்படுத்தப்படும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**சு.பரமானந்தம்,**
**ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் I**



## கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்

**ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் I**

| | |
|---|---|
| பிறந்த திகதி:- | 31.03.1959 |
| பிறந்த ஊர்:- | சரவணை |
| தந்தை :- | சுப்பையா சதாசிவம் |
| தாய்:- | சதாசிவம் மகேஸ்வரி |
| மனைவி:- | திருமதி அ.பாலசுசீலேன்மணி (ஆசிரியை) |
| ஆரம்பக் கல்வி:- | யா/ சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் |
| இடைநிலை உயர்கல்வி:- | யா/ வேலணை மத்திய கல்லூரி |
| பல்கலைக்கழகக் கல்வி :- | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- B.Sc<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- PGDE<br>பேராதனைப் பல்கலைக்கழகம்- M.Sc<br>தாய்லாந்து பல்கலைக்கழகம்-M.Sc<br>தேசிய கல்வி நிறுவகம்- PGDEM<br>யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்-M.Phil(Ed)<br>அமெரிக்கப் பல்கலைக்கழகம்<br>Phd in Edu (University of the valley) |
| தொழில்:- | தற்காலிக விரிவுரையாளர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| ஆசிரியர்:- | ஹற்றன் கைலன் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி கணித பாட ஆசிரிய ஆலோசகர்- தீவக வலயம் |
| அதிபர்:- | யாழ். புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் சிரேஷ்ட விரிவுரையாளர், உப பீடாதிபதி- ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி. |
| பீடாதிபதி:- | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய வாண்மைப் பங்களிப்பு, தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக் கழகம், வவுனியா வளாகம். |
| இணைப்பாளர்:- | கல்வி முதுமாணி கற்கை நிலையம், யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிறுவகம். |
| வெளியீடுகள்:- | கல்வியியல் ஆய்வுக் கட்டுரைகள் நூல்கள் (நவீன கல்விப் பிரயோகம், கணிதவியல்) |

விருதுகள்:-

I. வேலணை மத்திய கல்லூரி சமூகத்தினரால் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ஞாபகார்த்த "ஞானவியன்மணி" விருது.

II. சிறுவர் பூங்கா முன்பள்ளி உயர் கல்விக் குழுமத்தினரால் "கல்விப் பிரவாகம்" விருது.

சாதனைகள்:-

I. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபம் விடுதிகள், வகுப்பறைகள் என்பவற்றை கல்வி அமைச்சின் அனுசரணையுடன் புனரமைப்பு செய்தமை.

II.முகிழ் நிலை ஆசிரியர்களின் கற்றலுக்கான தகவல் தொடர்பாடல் வளங்களை அதிகரித்தமை.

III. நவீன வசதிகள் கொண்ட முகிழ்நிலை ஆசிரியர்களின் விடுதிக்கான முன்மொழிவை வழங்கி கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றமை.

IV. கல்லூரியில் கற்றலுக்கான சுற்றுச் சூழலை ஏற்படுத்த பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியமை (பசுமை மிக்க சுற்றாடலை உருவாக்கியமை, பயன் தரும் ரங்கள் நாட்டியமை, நவீன நீர் முகாமைத்துவ பிரயோகம்.

புதிய முன்மொழிவுகளாக : பச்சை வீட்டு முறையில் விவசாயம் கல்லூரி கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படும் திட்டம், சூரிய மின்சக்தி திட்டம் என்பவற்றை கல்வியமைச்சுக்கு முன்வைத்தமை.

V.கல்லூரியில் முன்பிருந்த அழகியல் பாடநெறிகள் நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரிக்குக் கொண்டு வந்தமை.

VI. கல்வியமைச்சுக்கு தேசிய ரீதியில் கல்வியியல் கல்லூரி கல்வியியலாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் கொள்ளளவு அபிவிருத்தி செயலமர்வுகளை இணைப்பாளராக இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைமுறைப்படுத்தியமை.

**மணிவிழா அமைப்பினர்**



### யாழ். மறைமாவட்ட ஆயரின் வாழ்த்துரை

**கல்வி அழகே அழகு**

யாழ்ப்பாணத்தின் உயர்கல்வி நிறுவனங்களுள் ஒன்றான யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 3 ஆவது பீடாதிபதியாக தலைமை வகித்து 29.03.2019 இல் மணிவிழாக் காணும் கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்களது மணிவிழா மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விப்புலம் சார்ந்து பல தகைமைகளை கொண்டிருக்கும் சான்றோனாகிய மணிவிழா நாயகன் 3 முதுநிலைப் பட்டங்களையும்பின் கலாநிதிப் பட்டமும் பெற்ற பெருந்தகையாவார். ஆசிரியராக கல்வி உலகில் நுழைந்த இவர் தன்து கடின உழைப்பாலும் விடா முயற்சியாலும் சிரேஷ்ட விரிவுரையாளர், உப பீடாதிபதி, மேலதிக பீடாதிபதி, பீடாதிபதி மதிப்பீட்டாளர், அதிதி விரிவுரையாளர், எனப் பல பதவிகளைப் பெற்று கல்வி உலகிலும் அதி உயர்நிலையை வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டிற்குரியது. இவரது பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறிடும் அதேவேளை ஓய்வுக்காலத்தில் அமைதி பெற்று அற நெறியில் வாழ இறையேசுவின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள**
**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம், யாழ். ஆயர்.**



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விச் சமூகத்திற்கு அளப்பெரிய பணியினை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக் காலத்தில் சமூகம்சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினை பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சி.சத்தியசீலன்,**
**செயலாளர் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**



### வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த பத்தொன்பது வருடங்களாக வினைத்திறனுடைய நல்லாசிரியர்களை உருவாக்கி வருகின்றது. அதற்கு அங்கு கடமையாற்றும் பீடாதிபதியும் உபபீடாதிபதிகளும் கல்வியியலாளர்களுமே காரணமாகும். இவ்வகையில் மணி விழாக்காணும் கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் மிக உயர்ந்த கடமையுணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமை ஆற்றியுள்ளார்.

"தக்கார் தகவிலார்" என்பது அவரவர் எச்சத்தால் காணலாம் என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு அமைய அவருடைய பிள்ளைகள் நன்மக்களாகச் சமூகத்தில் உயர்ந்த சேவைகளை ஆற்றி வருகின்றார்கள். ஓய்வு பெறுதலுடன் அவரது கல்விப்பணி நின்று விடாமல் தொடர வேண்டும். குடும்பத்தினருடன் நீண்டகாலம் இன்புற்று வாழ மணிவிழா வாழ்த்துக்களை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கருமத்திருதி வைத்திய கலாநிதி**
**டாக்டர் லயன் வை. தியாகராஜா,**
**தலைவர், மணிவிழாச் சபை.**



### வாழ்த்துச் செய்தி

மாணிக்க மணிவிழா
மாந்தருள் மகிழ் கீர்த்தியென- மனிதர்கள்
மின்னுதல் மிகமிக அரிது
ஆயினும் சதாவென ஜொலிப்பவரே!
அமிர்தமாய் ஆனீர் எம்முள்
அமிர்தலிங்கம் ஐயாவே!
நீர் வாழ்க நிலமெல்லாம் புகழ்தோங்க...

விஞ்ஞானமாணியாய் அரும்புவிட்டு
மெய்ஞானம் யாழ். சேர
பேராதனை முதல் முது
தகவல் முகாமையென தாய்லாந்து
பட்டப்படிப்பெல்லாம் பல்கலை நீந்தி
அமெரிக்கா ஆன்றதொரு சான்றோர்
நீராகி நீர் வாழ்ந்தீர்!

விரிவுரை வேந்தராய்- மண்ணுலகில்
மலையகம் முதல்கொண்டு
வடபுல வாசமெல்லாம்
வாசம் வீசுதே கல்வி மணம்

கல்விக் கண் கற்பகத்தருவே
மணிவிழாக்காணும்- உம்
கல்விப் பெரும் சேவை
தினம் வேண்டும்
மதிவரை நீர் உயர்வாய்
சிறந்தோங்க வாழ்த்துக்கள்.

**திரு.M.M. நியாஷர்,**
**சமூக சேவையாளர்,**
**மாநகர சபை உறுப்பினர், யாழ்ப்பாணம்.**

(இ-5898)

# தீர்மானங்கள் தீர்மானங்களாகவே காணப்படுவதாகக் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் விசேட மற்றும் மாதாந்த அமர்வு களின் போது சபையில் முன் வைக்கப்பட்ட பிரேரணைகளில் பல தீர்மானங்களாக நிறைவேற் றப்பட்ட போதிலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் வெறும் தீர்மானங்களாகவே காணப்படுவதாக நகரசபை உறுப் பினர் ம.நடனதேவன் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தீர்மானங்களில் சில இலகுவாக நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் நகர சபை யினரால் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருப்பதாக மேலும் அவர் சுட்டிக் காட்டியுள் ளார்.

தீர்மானங்களை நடைமு றைப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் சபையினரால் அலட்சி யம் செய்யப்படும் தீர்மானங்க ளாக சாவகச்சேரி நகர் பகுதியில் வாகன வேகக் கட்டுப்பாடு அமைத் தல்.

சாவகச்சேரி பொதுச் சந்தை யில் உழவர் சந்தைக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தல்.

அனுமதியற்ற விளம்பரப் பதாகைகளை அகற்றல் மற்றும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடி க்கை எடுத்தல்.

நவீன சந்தைக் கட்டடத்தின் மேல் பகுதியில் காட்சிப்படுத்தப்பட் டுள்ள விளம்பர பதாகைகளை அகற்றல்.

மரணச்சடங்கு ஊர்வலத் தின் போது வெடி கொளுத்துவத னைத் தடை செய்தல்..

தனியார் கல்வி நிலைய வகுப் புக்களை மாலை ஆறு மணியு டன் நிறுத்தல் மற்றும் ஞாயிறு, வெள்ளி தினங்களில் விடுமுறை வழங்கல்..

ஒவ்வொரு வட்டாரத்திலும் கட்டப்படும் கட்ட அனுமதி தொட ர்பான விபரத்தை அந்தந்த வட் டார உறுப்பினர்களுக்கு தெரியப் படுத்தல்..

நகரத்தின் பிரதான வீதிக ளில் நீர்க்குழாய் பொருத்தும் போது வெட்டிய கிடங்குகளை உரிய முறையில் மூடுதல்..

மின்சார சபைக்கு கட்டணம் செலுத்தியும் வீதி விளக்குகள் உரிய முறையில் பொருத்தப்படா மைக்கு தீர்வு காணுதல்.

உள்ளிட்ட பல சபைத் தீரமா னங்கள் இலகுவாக நடைமு றைப்படுத்தக்கூடிய சாத்தியம் இருந்தும் இதுவரை நடைமு றைப்படுத்தப்படாமல் வெறும் தீர் மானங்களாகவும் அறிக்கைக ளாகவும் மாத்திரமே காணப்படு வதாக நடனதேவன் சுட்டிக்காட்டி யுள்ளார்.

பல எதிர்பார்ப்புக்களுடன் தேர் தலுக்கு முகம் கொடுத்து உள்ளூ ராட்சி சபைகளுக்குள் நுழைந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பி னர்கள் இன்று மக்களுக்கு எது வும் செய்ய முடியாமல் திணறி வரு கின்றனர்.

தீர்மானங்கள் நிறைவேற் றப்படாமைக்கு சபைகளின் நிதி நிலைமையும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (5-30)

# மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்ப லவாண வேத விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை முற்பகல் 10 மணியள வில் கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து 18 நாட்கள் திருவிழா நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதி வரும் 14 ஆம் திகதி புதுவருடப் பிறப்பு தினத்தில் முற்பகல் 9 மணியளவில் தேர்த்திருவிழா வும் மறுநாள் காலை 9 மணி யளவில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (5-272)

# முதியோர் சங்க நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச மட்ட முதியோர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 25 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் அ.இராஜநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர், சமூக உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய நிர்வாகத் தெரிவில் வி.சிறி சக்திவேல் தலைவரா கவும் சு.கனேசலிங்கம் செய லாளராகவும் எஸ்.பி.சண்முக நாதன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (5-106)

# கலந்துரையாடல்

(காரணவாய்)

நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர்களிடையே யான கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக் கிழமை மாலை 6.30 மணிய ளவில் நெல்லியடி மத்திய கல் லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பழைய மாண வர்கள் சமூகமளித்து ஆலோ சனைகளையும் கருத்துக்க ளையும் வழங்குமாறு ஏற்பாட் டுக் குழுவினர் கேட்டுக் கொண் டுள்ளனர். (5-60)

# மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளை குப்பி விளக்கு தவறி விழுந்ததில் இரு வேறு நபர்களுக்கு எரிகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தீக்காயங்களுக்கு உள்ளான இருவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 60வயதான தெய்வேந் திரம் என்பவர் இரவு 7மணியளவில் எதிர்பாராத விதமாக விளக்கு விழுந்து தீப்பிடித்ததில் முகம் மற்றும் தலைப்பகுதிகளில் எரி காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளையில் நுணாவிலைச் சேர்ந்த 35வயதான பெண் ஒருவர் மின்சாரம் இல்லாத வேளையில் குப்பி விளக்கு விழுந்து தீப்பிடித்ததில் தீக்காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார். (5-30)

# குருசடித்தீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திரு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச் சிலுவைப்பாதையுடன் நற்கருணை விழா இடம்பெற வுள்ளதுடன் மறு நாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திரு விழாத் திருப்பலி திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும் என ஏற்பா ட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# "யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்" எனும் தலைப்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இல ங்கை ஆவணக் காப்பகத்தின் 67 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 12 மணி வரை நல்லூர் 199, கோவில் வீதியில் அமைந்துள்ள சமகாலக் கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம்" எனும் தலைப்பில் கட்டடக் கலைஞர் மதுரா பிறேமதிலகவின் கருத்துப் பகிர்வும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (5-7)

# அடையாளம் காணப்படாத சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத நிலையில் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கே.கே.எஸ்.பொலிஸாரால் கடந்த 19 ஆம் திகதி வெளியக நோயாளர் பிரிவில் ஒப்படைக்கப்பட்டது. இவரது சடலத்தை இதுவரை எவரும் உரிமை கோராத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலத்திற்கு உரித்துடையவா் அடையாளம் காட்டி 07 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (5)

# சாவகச்சேரி நகரசபையில் விசேட கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரின் ஏற்பாட்டில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெறும். இக் கலந்துரையாடல் நிகழ்வில் சாவகச்சேரி வர்த்தக சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நகர சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-30)

# இராசி பலன்

**மீனம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்தி கள் வந்து சேரலாம், தன்னம் பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு.

**மேடம்:** இழுபறியாக இருந்த காரி யங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும், புதிய திட்டங்கள் கை கூடும் வாய்ப்புண்டு.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட் டால் மகத்துவம் காண வேண் டிய நாள், பயணங்களின் போது பொருட்களில் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்களின் சந்திப்பு உண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட் டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் தன வரவுகள் கிடைக்கலாம், பொது வழியில் மதிப்பும் மரி யாதையும் உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட் டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | | செவ் | ராகு |
| புத, சுக் | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்,திருவாதிரை<br>இரவு 10.25இற்கு<br>மகர-சந் | | |
| சனி, கேது, குரு, சந் | | | |

29.03.2019

பங்குனி 15, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

நவமி பின்னிரவு 4.11 மணிக்கு

பூராடம் பிற்பகல் 4.05 மணிவரை

சுபநேரம் 6.13-7.43 மணிவரை

இராகுகாலம் 10.43-12.13 மணிவரை

வளவன்

**கடகம்:** சச்சரவை விட்டு சாதித்து காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தக வல்கள் வந்து சேரலாம், எடு த்த காரியத்தில் முன்னேற் றம் காண்பீர்கள்.

**மகரம்:** வாக்கு மேன்மையுண்டு, சயன சுகக்குறைவுகள் ஏற் படலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர் வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களை அனுசரித்து செல் வது நல்லது, எடுத்த காரிய த்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**தனுசு:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு, தேக நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, பித்த சம்பந்த மான ரோக பயமுண்டு, பண ப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஈடுபாட்டுத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு, தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** சிந்தித்து செயற்பட்டு சிற ப்படைய வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப காரி யச் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

# ஐ.நா.தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை

# ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவரை அழைத்து ஜனாதிபதி அதிருப்தியை வெளியிட வேண்டும்

## மகிந்த அணி போர்க்கொடி




(கொழும்பு)

ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவரை அழைத்து ஜனாதிபதி கடுமையான அதிருப்தியை வெளியிட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினரையும் தன்னையும் காட்டிக்கொடுத்துள்ளதாக களுத்துறை, மீகஹதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தெட்டத்தெளிவாக கூறியுள்ளார் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவர் அஜீஸை மீண்டும் நாட்டுக்கு அழைத்து கடுமையான அதிருப்தியை வெளியிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி உரையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணை வழங்கி ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுவர் கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி கைச்சாத்திட்டு நிறை வேற்றப்பட்ட 40/1 புதிய தீர்மானத்தை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதனை நான் நிராகரித்துள்ளேன். மேலும் அது எனக்கு அறிவிக்கப்படாமல் அல்லது வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அல்லது அதன் செயலாளருக்கு தெரியாமலேயே அவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எமது நாட்டு தரப்பினரின் பிழையான தீர்மானங்களின் காரணமாக இடம்பெற்ற அந்த நிகழ்வு குறித்து எனது முழுமை யான எதிர்ப்பை தெரிவிக்கின்றேன் என்றும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐந்து மாணவர்கள் உட்பட 11 தமிழர்கள் கடத்தல் குறித்து கரன்னகொட அறிந்திருந்தார்

(கொழும்பு)

ஐந்து மாணவர் உள்ளிட்ட 11 பேர் கடத்தி, சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதை, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட பூரணமாக அறிந்திருந்த நிலையில், அவர் அவ்விடயம் தொடர்பிலான விடயங்களை மூடி மறைத்துள்ளமை விசாரணைகளில் உறுதியாகியுள்ளதாக சி.ஐ.டியினர் நேற்று முன்தினம் கோட்டை நீதவானுக்கு அறிவித்தனர்.

கடற்படையின் முன்னாள் புலனாய்வு பிரதானியும் தற்போதைய ரியர் அட்மிரல் தர அதிகாரியுமான ஆனந்த குருகே, கரன்னகொடவின் ஆலோசகராக இருந்த கொமாண்டர் உதயகீர்த்தி பண்டார, முன்னாள் கிழக்கு கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் துஷித் வீரசேகர உள்ளிட்டோரின் வாக்குமூலங்களை மையப்படுத்தி சி.ஐ.டியின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா மேற்கண்டவாறு நீதிமன்றில் அறிவித்தார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் ரங்க திஸாநயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போதே விஷேட மேலதிக விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பித்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா இந்த விடயங்களை வெளிப்படுத்தினார். (இ-7)


## பொதுக்கூட்டம்

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம், யாழ்ப்பாணம்

உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இடம்:-** IIS.No,200 சிவன் பண்ணை வீதி,யாழ்ப்பாணம்

**காலம்:-** 30.03.2019 (சனிக்கிழமை) 10.00AM

தலைவர்.
M.Thavakumaran
077 724 3091

(8249)

செயலாளர்
T.Sreeharan
077 724 2307

## இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள்

**இடம்:-** நவமங்கை நிவாஸம், இராஜ வீதி, கோப்பாய் மத்தி.

**விண்ணப்ப முடிவுத் திகதி:-** 30.04.2019

**ஆரம்பம்:-** 05.05.2019

பன்னவேலை பயிற்சியும் வழங்கப்படும்.

பயிற்சிக்கு தேவையான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறும்.

நிர்வாகம்
T.P:- 021 223 0418

(C-5897)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் இந்து மாமன்ற பொறுப்பாசிரியரும் பாடசாலை ஒழுக்க நடைமுறைப்படுத்தல் ஆசிரியருமாகிய **திரு.தெ.ரவீந்திரன்** அவர்கள் கடந்த 12.03.2019 அன்று மல்லாகம் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சந்தியப்பிரமாணம் செய்து கொண்டமையிட்டு உளமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு மக்களுக்கு நற்சேவையாற்ற வேண்டும் எனவும் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மு/பெரியபுளியங்குளம் அ.த.க.பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள்

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 33 செவ் இல்<br>உயரம்: 5 ¾<br>தகைமை/தொழில்:Computer Dip. London<br>எதிர்பார்ப்பு:London இல் பிறந்த, சிறு வயதில் சென்று வசிக்கின்றவர்களும், உள்நாட்டிலிருந்து சென்றுவசிக்க கூடியவர்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/1649 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 18 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Charted Accounting, Accountant<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Lecturer, Dentist, Australiaமட்டும்<br>தொ.இ: G/3612 |
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்A/L,தாதிய உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம், அரசதொழில்<br>தொ.இ: B/1655 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 32 ½ செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: BAபட்டதாரி, அரச அபிவிருத்திஉத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம், அரசதொழில்<br>தொ.இ: G/3618 |
| பிறப்பு: 1962 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>கி.பா: 31 ¼<br>உயரம்: 5'6"<br>தகைமைதொழில்A/L,அரச உத்தியோகம்(AO)<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ: B/1705 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>கி.பா: 25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Swiss<br>எதிர்பார்ப்பு: Swiss, Londonமட்டும்<br>தொ.இ: G/3619 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 5 ¼<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்:HND Engineering, IESL, Assistant Engineer<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்,வங்கி<br>தொ.இ: B/1715 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 44 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: விவசாய விஞ்ஞான பட்டதாரி, அரசதிட்டஅலுவலகர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/3633 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கருணாநிதியின் பேச்சால் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட ஈழத்தமிழர்கள்-ஓ.பி.எஸ். பிரசாரம்



(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் பேச்சைக் கேட்டு, இலங்கையில் பதுங்கு குழிகளில் இருந்த ஈழத்தமிழர்கள் வெளியில் வந்தனர், அந்த நேரம் இலங்கை அரசாங்கம் வெடிகுண்டுகளை வீசித் தமிழர்களை கொத்துக் கொத்தாகக் கொன்றழித்தது என தமிழகத்தின் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் குற்றம்சுமத்தியுள்ளார்.

தமிழகத்தில் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், தேர்தல் பிரசாரம் ஒன்றில் கலந்து கொண்டு தமது கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர் நடக்கும்போது கருணாநிதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது போல் பாவனை செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பினார்.

அப்போது கருணாநிதியிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டபோது, இலங்கைத் தமிழர்களுக்காக நான் மத்திய அரசிடம் பேசி சுமுகமாக போரை நிறுத்திவிட்டேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆனால் அதேசமயத்தில் இலங்கையில் பதுங்கு குழியில் இருந்தவர்கள் கருணாநிதியின் பேச்சை நம்பி வெளியே வந்தனர். அப்போது இலங்கை அரசு வெடிகுண்டுகளை வீசி தமிழர்களை அழித்து விட்டது.

அந்தச் சூழ்நிலையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் போரை நிறுத்த வலியுறுத்தி பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற கனிமொழி இலங்கை தமிழர்களுக்காக பேச்சுவார்த்தை நடத்தாமல் பரிசு மட்டும் வாங்கி வந்துவிட்டார் எனத் தெரிவித்தார். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் கிழக்கு வளர்மதி முன்பள்ளியில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வளர்மதி முன்பள்ளி மைதானத்தில் பொறுப்பாசிரியர் திருமதி. சுகந்தி சுதாகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஸ்ரீகணேசமூர்த்தி ஜெய்கணேஸ், சிறப்பு விருந்தினர்களாக தருமபுரம் கிழக்கு கிராம சேவையாளர் திருமதி. குணாளினி கிருஸ்னவதனன், தருமபுரம் கிழக்கு வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பாலசிங்கம் சசிகரன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. யசோதினி ஜெயந்தன், கௌரவ விருந்தினராக பாஸ்டர் டேவிட் ஜெயபாலன் மிசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

## நற்செய்தி தியான வழிபாடு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இறை இரக்க தியான இயக்குநர் அருட்பணி கலாநிதி குமார் ராஜாவின் நற்செய்தி தியான வழிபாடுகள் யாழில் இடம்பெறவுள்ளன.

இத்தியான வழிபாடுகளில் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் இறை தியான இல்லத்திலும் நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும் நாளை மறுதினம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12.30 மணிவரை பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை புனித மரியன்னை பேராலயத்திலும் நற்கருணை மற்றும் குணமளிக்கும் வழிபாடுகள் என்பன இடம்பெறவுள்ளன. (5-105)




முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் வடக்கு மாகாண சபையின் 1.5 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட பனிக்கன்குளம் முதியோர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் ச.சதாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன், கட்டடத்திற்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததை தொடர்ந்து வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம் கட்டடத்தை நாடாவெட்டி திறந்து வைத்தார். இதன்போது இம் முதியோர் சங்கத்தில் அங்கத்தவர்களுக்கான நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் விருந்தினர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

## கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் குறித்து ஆப்கான் தூதுவருடன் தலதா சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கிடையில் சிறைக்கைதிகளை பரிமாற்றிக் கொள்ளும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவருக்குமிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.



ஆப்கானிஸ்தான் தூதுவர் மொஹமட் அஷ்ரப் ஹய்டாய் மற்றும் நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவுக்குமிடையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது, சிறைச்சாலைகளில் இருக்கும் ஆப்கானிஸ்தான் சிறைக்கைதிகள் தொடர்பாக ஆப்கானிஸ்தான் தூதுவர் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் கைதிகள் தொடர்பில் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பில் அவர் பாராட்டை தெரிவித்துள்ளார். (இ-7)

## பாரிய நீதி மோசடி இடம்பெறுவதற்கான அபாயம்; ட்ரான்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெறுவதற்கான அபாயமுள்ளதாக ட்ரான்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் பாரிய வெளிநாட்டு முதலீடுகள் வரும் போது, அவை உள்நாட்டு பொருளாதாரத்தில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

எனவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் குறித்த செயற்றிட்டம் பற்றிய முழு விபரங்களும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பதாகவே பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-7)

## தேர்தலை நடத்த வேண்டும் என்ற தேவை இந்த அரசாங்கத்துக்கு இல்லை - டளஸ்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற தேவை அரசாங்கத்துக்கு இல்லை. அதனால் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் மாகாண சபைகள் தேவையில்லை என்று தீர்மானித்து, அவற்றை ஆளுநர்களின் அதிகாரத்துக்கு கீழ் கொண்டுவரும் அபாயம் இருக்கின்றது.

இவ்வாறான நிலை ஏற்பட்டால் யாரும் கவலைப்பட்டு பிரயோசனம் இல்லாமல் போகும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் எந்த அறிவிப்பும் இல்லாமல் பிற்படுத்தப்பட்டு ஒன்றரை வருடமாகின்றது. எப்போது நடக்கும் என்று யாருக்கும் தெரியாது.

ஜனாதிபதிக்கும் தெரியாது. பிரதமருக்கும் தெரியாது. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் தெரியாது. 9 மாகாண சபைகளில் 6 மாகாணங்களின் ஆட்சிக்காலம் முடிவடைந்துள்ளது. மேல் மாகாணசபை காலம் இன்னும் சில தினங்களில் முடிவடையவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

### "நான் அடிப்பதைப் போன்று அடிக்கின்றேன் நீ அழுவதைப் போன்று அழு"

# வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சாது தமிழ் மக்களை வாழவிடுங்கள்

## சுமந்திரனுக்கு ஆனந்தசங்கரி நெற்றியடி




(யாழ்ப்பாணம்)

தாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் வரை அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட மாட்டார்கள். முன்னாள் போராளிகளையும் நிம்மதியாக இருக்க விடமாட்டீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாங்கள் இதுவரை செய்து வந்த அரசியலை மிகவும் அவதானமாக கவனித்து வந்த படியால் சில ஆலோசனைகளை நான் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு என்னை ஆளாக்கி விட்டீர்கள். அதனால் இதனை பகிரங்க கடிதமாகவே தங்களுக்கு எழுதுகின்றேன்.

தாங்கள் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக 2010 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அன்றைய செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் "வேலை வெட்டி இல்லாத இளைஞர்கள் தான் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்றும், இராணுவத்தினரை விட அதிகளவு பொதுமக்களை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள்" என்றும் கூறியிருந்தீர்கள். அதனால் விடுதலைப் புலிகளும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோணத்தில் கூறி இருந்தீர்கள். இது அன்றைய அரசுக்கும் ஒருவாய்ப்பாக போய் விட்டது.

2015ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் யாழ்ப்பாணத்து மக்கள் சுமந்திரனை வெல்ல வைக்க வேண்டும் என சம்பந்தன் வேண்டுகோள் விடுத்தார். அவரின் அறிக்கையில் மற்றவர்கள் வெற்றி தோல்வியைப் பற்றி அக்கறை காட்டாமல் உங்களை வெல்ல வைக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். நீங்களும் வென்றீர்கள் அல்லது வெல்ல வைக்கப்பட்டீர்கள். உங்களுக்கு



விழுந்த வாக்குகள் ஒவ்வொன்றும் விடுதலைப் புலிகள்தான் அதிகளவு பொது மக்களை கொன்றார்கள் என்பதற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டது போன்றது. அதன் காரணமாக என்னவோ தாங்கள் அமைக்கப்பட்ட நல்லாட்சியில் ஒரு அமைச்சரைப் போன்றே இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்.

ஆனால் அண்மையில் பாராளுமன்றத்தில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்றால் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை என்று இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவது போன்று வீராப்பு வசனம் பேசியிருக்கின்றீர்கள். இதனை "நான் அடிப்பதைப் போன்று அடிக்கின்றேன் நீ அழுவதைப் போன்று அழு" என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது வரப் போகின்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஞாபகமறதி அதிகம் என்பதால் இப்படி பேசியாவது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஆரம்பம் என்று எடுத்துக் கொள்ளலாமா?. அல்லது சரிந்து கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை நிமிர்த்துவதற்கான தூக்கி நிறுத்தும் செயற்பாடாக எடுத்துக் கொள்ளலாமா? நீங்கள் மட்டுமல்ல இப்போது தமிழரசுக் கட்சி பாராளுமனற உறுப்பினர்கள் அனைவரும் சபையில் அரசுக்கு எதிராக பேச ஆரம்பித்து விட்டார்கள். தேர்தல் வரப்போகின்றது. இனி என்ன தமிழரசுக் கட்சி வீர வசனம் பேசவேண்டிய நேரம் தான்.

தங்களின் உயிருக்கு ஆபத்து என்று கூறி புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளையும் சிறைக்கு அனுப்பி கொண்டிருக்கின்றீர்கள். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வெளியில் வந்து சக வாழ்விற்கு திரும்பி தங்கள் குடும்பத்தினருடன் வாழும் முன்னாள் போராளிகளையும் சிறையில் தள்ளும் நோக்கோடு தங்கள் சகாக்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த நிலையில் எவ்வாறு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள்.

தாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் வரை அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப் பட மாட்டார்கள். முன்னாள் போராளிகளையும் நிம்மதியாக இருக்க விட மாட்டீர்கள். அண்மையில் நடந்த அரசியல் புரட்சியில் இந்த அரசைக் காப்பாற்றுவதற்காக வரிந்து கட்டிக் கொண்டு நீதிமன்றம் சென்ற தாங்கள், அந்த அவசரத்தை அரசியல் கைதிகள் விடயத்தில் காட்டவில்லையே ஏன்? தாங்கள் ஒரு சட்டத்தரணி என்பதால் வாங்கிய பணத்திற்கு விசுவாசமாக வாதாடி' வெற்றி பெற்றுக் கொடுத்தீர்கள் என்று நினைக்கின்றேன்.

அரசியல் கைதிகளுக்காக இதுவரை யாரும் பணம் தர முன் வரவில்லையா? இரண்டு நாடுகள் செய்து கொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் இணைந்திருந்த வடக்கு- கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளதே, இரண்டு நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒரு நாட்டின் நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது என்று ஏன் வரிந்து கட்டிக் கொண்டு நீதிமன்றம் செல்லவில்லை?

சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணை வரும் போது நீங்கள் எந்தப் பக்கத்தில் நிற்பீர்கள்? நீதிபதிகள் உங்களைப் பார்த்து விடுதலைப் புலிகள் தான் அதிகளவு பொது மக்களை கொன்றரர்கள் என்று கூறியுள்ளீர்கள். நாங்கள் யாரை முதலில் விசாரணை செய்ய வேண்டும் என்றால் தாங்கள் யாரைச் சுட்டிக்காட்டுவீர்கள்? விடுதலைப் புலிகளையா? அல்லது இராணுவத்தினரையா? தயவு செய்து கூறுங்கள். நீங்கள் ஒரு சாட்சியாக போகும் போது, அரசுக்கு ஆதரவாக உங்களின் ஒரு சாட்சியே போதும், நீங்கள் ஒரு சட்டத்தரணி என்பதால் இது உங்களுக்கும் நன்றாகவே தெரியும்.

ஒரு சிலரின் பதவி ஆசையால் எமது மக்கள் முள்ளிவாய்க்கல் வரை சென்று பல துன்பங்களை அனுபவித்து வந்து விட்டார்கள். தயவு செய்து இனியும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாது அவர்களை வாழவிடுங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### "மிகவும் மோசமாக பழிவாங்கப்பட்டேன்

# பறிக்கப்பட்ட வரப்பிரசாதங்களை பெற்றுத்தர நடவடிக்கை எடுங்கள்

## நாடாளுமன்றில் பொன்சேகா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான முறையில் பழிவாங்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பறிக்கப்பட்ட எனது வரப்பிரசாதங்கள் அனைத்தையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான முறையில் பழிவாங்கப் பட்ட எனக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் வரப்பிரசாதம், சம்பளம், கொடுப்பனவுகள், உறுப்பினர் ஓய்வூதியம், வாகன அனுமதிப்பத்திரம் என அனைத்தும் மீண்டும் வழங்கப்படாமை என்பன நாடாளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமையை மீறும் செயலாகும்.

அதனால் இதுதொடர்பாக ஆராய்ந்து பார்த்து எனக்கு வழங்கப்படவேண்டிய அனைத்து வரப்பிரசாதங்களையும் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்' என தெரிவித்துள்ளார். (இ-7)




சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரி நீதிமன்றத்தில் சமாதான நீதவான்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

# மரண அறிவித்தல்

## கந்தையா சிவஞானம்

### (ஓய்வுநிலை அதிபர்-கிளி/பன்னங்கண்டி அ.த.க.பாடசாலை)



மடத்தடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் D10 உருத்திரபுரம், இல.01, பிள்ளையார் வீதி, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட **கந்தையா சிவஞானம்** (ஓய்வு நிலை அதிபர் -கிளி/ பன்னங்கண்டி அ.த.க. பாடசாலை) நேற்று முன்தினம் (27.03.2019) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராணியின் அன்புக் கணவரும் வாலாம்பிகை, காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், கலியாணசுந்தரம் (மாணிக்கம்) மற்றும் தையல்நாயகி (ஓய்வுநிலை ஆசிரியர்), இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணியின் அன்பு மைத்துனரும் சுபாலினி (லண்டன்), சுதாகினி (சுவிஸ்), சுகந்தினி (உள்ளூராட்சி உதவியாளர் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி), சுதர்சினி (சுவீடன்), பிரதீபன் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ராஜசிங்கம் (லண்டன்), ஜெயக்குமார் (சுவிஸ்), ஸ்ரீரங்கநாதன் (முகாமைத்துவ உதவியாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி), நந்தகுமார் (சுவீடன்), சுகந்தா (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr. ராகுல், Dr. அபிரா தினேஸ், ராம்சி (லண்டன்), ஜென்சிகா, ஜெதுசன் (சுவிஸ்), கௌதமன், அபிசேகன், சங்கவி, கிருசிகேசன் (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்), அர்வின், றாகவி (சுவீடன்), வைஷ்ணவி, பிரணவி, அஸ்வின் (சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P:- 077 203 2969 தகவல்:- ராஜசிங்கம் குடும்பம் மற்றும் பொன்.விநாயகமூர்த்தி குடும்பம் (C-5900)

# சுகாதார விதிமுறைகளை மீறிய கடை உரிமையாளர்களுக்கு தண்டம்

மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட இரண்டு உணவகங்கள் உட்பட காலாவதியான தேயிலை பைகளில் மோசடியான வகையில் மீளவும் உற்பத்தித் திகதி மற்றும் காலாவதியாகும் திகதிகளில் மாற்றம் செய்து வர்த்தக நிலையங்களுக்கு நடமாடும் சேவை மூலம் விற்பனை செய்த தேயிலை விற்பனை நிலைய உரிமையாளர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் சுகாதார விதிமுறைகளை மீறிச்செயற்பட்ட வர்த்தக நிலையம் ஒன்றை உடனடியாக மூடுமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி செல்வநாயகம் - லெனின்குமார் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அமர்வுகள் துணுக்காய் சுற்றுலா நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே நீதிபதி இவ்வாறு உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வாரம் மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான சுகாதார பரிசோதகர்கள் திடீர் ஆய்வு நடவடிக்கைகளை மல்லாவி பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது மல்லாவி நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றும் மற்றும் துணுக்காய் பேருந்து நிலையப் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றும் சுகாதார விதிமுறைகளை மீறி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தமை மற்றும் அதனைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்து வந்தமை, உணவுப் பொருட்களைக் கையாளுபவர்களும் மருத்துவச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளாமை என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அமர்வுகள் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் நடைபெற்ற போது மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகரினால் மேற்படி இரண்டு உணவகங்களினதும் மற்றும் நடமாடும் வாகன தேயிலை விற்பனை நிலையம் ஆகியவற்றின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்றதையடுத்து மேற்படி தண்டப்பணத்தை நீதவான் விதித்ததுடன் மல்லாவி பகுதியில் இயங்கிய உணவகம் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டமையால் உடனடியாக மூடுமாறும் அவர் உத்தரவிட்டார். (2-15)

# மக்கள் பாவனைக்காக தவம் கிடக்கும் பூநகரி பொதுச்சந்தை கட்டடத் தொகுதி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 18.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பொதுச் சந்தை கட்டடத் தொகுதி எந்தப் பயனுமின்றி பூட்டப்பட்டு செயலிழந்து காணப்படுகின்றது.

இப்பகுதி பொதுச் சந்தையில் 32 கடைகள் அமைக்கப்பட்டன.

இருப்பினும் இரு கடைகளைத் தவிர மீதியுள்ள எந்தக் கடைகளும் எதுவிதமான பயனுமின்றி காணப்படுகின்றது.

ஏற்கனவே சந்தை இயங்கிய பகுதியில் குறித்த நிதியில் கட்டடத்தை அமைக்குமாறு மக்கள் கோரிய போதும் மாற்றிடம் ஒன்றில் மேற்படி கடைகள் அமைக்கப்பட்டன.

பூநகரி பொதுச் சந்தையானது தற்போது வாடியடிச் சந்தியில் ஏற்கனவே இயங்கிய இடத்தில் இயங்கி வருகின்றது. இந்நிலையில் நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பொதுச்சந்தை கட்டடத் தொகுதி எதுவித பயனுமின்றி பூட்டப்பட்டு செயலிழந்து காணப்படுகின்றது. (2-315)




# கால்நடைகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி கிளிநொச்சி,முல்லைத்தீவுப் பகுதிகளில் மோசடி

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பின்தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற மக்களிடம் நல்லின கால்நடைகளைப் பெற்றுத்தருவதாகக் தெரிவித்து சிலர் பல இலட்சம் ரூபா நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு சந்தியில் இயங்கும் ஓர் அமைப்பினுடைய கடிதத்தலைப்பு, பண வரவுச்சிட்டை என்பவற்றை பயன்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு குறைந்த விலையில் நல்லின பசுமாடுகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி ஒவ்வொரு குடும்பத்திடம் இருந்தும் 25 ஆயிரம் ரூபா வரையான பணம் அறவிடப்பட்டிருக்கின்றது.

இதில் முற்பணமாக 12 ஆயிரத்து 600 ரூபாவும் கால்நடைகளை ஏற்றி ,இறக்குவதற்கான கட்டணமாக 12 ஆயிரத்து 400 ரூபாவும் அறவிடப்பட்டிருக்கின்றது.

அவர்களுக்கான கால்நடைகள் இதுவரை வழங்கப்படாததைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த அலுவலகத்தை கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் தேடி வருகின்றனர்.

குறித்த நிறுவனத்திற்குரிய தொலைபேசி இலக்கமும் தற்போது இயங்கு நிலையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (2-315)

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையை அரசு திசை திருப்ப நினைக்கிறது

## சாள்ஸ் எம்.பி.காட்டம்



(மன்னார்)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட நியாயப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டன என்ற கோரிக்கை முற்றும் முழுதும் பொய்யான விடயம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் இராணுவத்திடம் எவ்வளவு காணிகள் இருக்கின்றன. எவ்வளவு காணிகள் தற்போது விடுவிக்க முடியும் என்பது தொடர்பான வரைவை இராணுவம் ஒப்படைத்திருந்தது. அப்படி இருக்கின்ற போது ஐ.நா. மனித உரிமை பேரவையில் அரசாங்கம் உண்மைக்கு புறம்பான செய்திகளை தெரிவித்து ஐ.நா. மனித உரிமை பேரவையை வேறு வழிகளை திசை திருப்பும் ஒரு நடவடிக்கையாகவே அவர்களுடைய கருத்து அமைந்ததாக நான் கருதுகின்றேன்.

மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்லாது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் குறிப்பாக கிளிநொச்சி பாடசாலைகள் கூட இராணுவமயமாக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மன்னார் முள்ளிக்குளம் கேப்பாபிலவு, சிலாவத்துறை, தலைமன்னார் போன்ற அதிகபடியான மக்கள் காணிகள் ஒருசில காணிகள் விடுவிக்கப்பட்டாலும் மக்கள் விவசாயம் செய்த காணிகள் மக்களுக்கு தேவையான பொதுவான காணிகள் என பல முக்கியமான காணிகளை இராணுவம் தம்வசம் வைத்துள்ளது.

வெள்ளாங்குளத்தில் 500 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய பண்ணைகளில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் வரையில் வேலை செய்யக்கூடிய பண்ணைகள் கூட இன்றும் இராணுவ வசம் இருக்கின்றது.

ஆகவே ஐ.நா. சபையில் அரசாங்கம் தெரிவித்த கூற்றை நான் முற்றுமுழுதாக மறுக்கின்றேன். அதேநேரத்தில் கடற்படை முகாம்கள், இராணுவ முகாம்களை தங்களுடைய நிரந்தர முகாம்களாக மக்களுடைய காணிகளை நிரந்தர சுவீகரிப்பின் மூலம் அரச வர்த்தமானியின் மூலம் அவர்கள் தங்கள் சொந்த முகாம்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

அதற்கு மிக முக்கியமான காரணம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அந்த இடங்களில் சில வேளைகளில் இருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

ஆகவே மன்னார் மனித புதைகுழி போல ஒவ்வொரு இராணுவ முகாமுக்குள்ளும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எனது கோரிக்கை என அவர் மேலும் தெரிவித்தார். (2-285)





அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்தப்படும் தேசிய 2018 ஆம் ஆண்டுக்கான உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றி முதல் இடத்தைப்பெற்றுக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினையும் மாவட்ட அரச அதியர் மற்றும் உத்தியோகத்தர்களையும் கௌரவிக்கின்ற நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விருதினைத் தாங்கியவாறு மாவட்டச்செயலக வளாகத்திற்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டதையடுத்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரஜைகள் குழுவின் செயலாளர் சி.ஜீவநாயகம், கிளிநொச்சி மகாவித்தியாலய அதியர் ஜெயந்தி தனபாலசிங்கம், ஓய்வூதிய சங்கத்தின் பிரதிநிதிகள், கரைச்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள, விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-315)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு மாற்றுத் தொழில் வழங்கத் திட்டம்

## புதுக்குடியிருப்பு பொலிஸ் தீவிரம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் ஈடுபட்டு நீதிமன்ற குற்றத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களை அழைத்து அவர்களுக்கு மாற்றுத் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுத்தும் முயற்சியில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈடுபட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொலிஸார் அழைத்து ஒரு சிறப்பு கலந்துரையாடலொன்றை அண்மையில் மேற்கொண்டனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ.பி. சந்திரபால தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள கைத்தொழில் பேட்டையின் முகாமையாளர் வருகை தந்திருந்தார்.


இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகரித்து செல்லும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கையால் ஏற்படும்பாதிப்புக்கள்,தொழில் இல்லாத நிலையில் இவ்வாறான சட்டவிரோத தொழில் செய்பவர்களை அழைத்து அவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் விவசாய செய்கையை மேற்கொள்ளவும் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஆவன செய்துள்ளதுடன் இனிவரும் காலங்களில் சட்டவிரோத தொழிலை எவரும் செய்யக்கூடாது என்றும் கலந்து கொண்டவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருந்து சட்டவிரோத கசிப்பு மற்றும் விற்பனை நடவடிக்கை ஊடாக 54 இலட்சத்து 28 ஆயிரம் ரூபா நீதிமன்றத்திற்கு தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இவ்வாண்டு மார்ச் மாதம் வரை 50 கசிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளதுடன் அவர்களிடம் இருந்து 8 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் தண்டம் அறவிடப்பட்டுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-281)

# புருசோத்தமன் எழுதும்

# கம்பவாரிதிக்கு ஓர் அன்பு மடல்




ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுப்பதா? இல்லையா? என்ற விடயத்தில் கூட நாம் ஒருமித்து நிற்கமுடியாமல் போய்விட்டது.

கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக்கூறிய தமிழரசுக் கட்சிக்கு கால அவகாசம் காலத்தைக் கடத்தும் என்பதனைக்கூட உணரமுடியவில்லை.

காலத்தைக் கடத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட விடயம் நீத்துப் போவதற்கு வழிவகுக்கும் என்பதே இலங்கை அரசின் உள்நோக்கம். இருந்தும் இவற்றை உணராமல் அல்லது உணராதது போல தமிழரசுக் கட்சி செயற்படுவதுதான் வேதனைக்குரியது.

தமிழரசுக் கட்சி மீது இவற்றை நாம் கூறும்போது தமிழரசுக் கட்சிக்கு நாம் எதிர்ப்பு என்று தயவுசெய்து நினைத்து விடாதீர்கள்.

துரியோதனா! நீ செய்வது தர்மமன்று எனக்கூறிய விதுரனே துரியோதனனைக் காப்பாற்ற நினைத்த முதல் ஆள்.

மாறாக துரியோதனா! நீ செய்வது சரி என்று யாரெல்லாம் கூறினார்களோ அவர்கள்தான், தன் ஆதரவாளர்கள் என்று துரியோதனன் நம்பினான். ஆனால் அது உண்மை அன்று என்பதை குருசேத்திரப் போரின் 18 ஆம் நாளில்தான் துரியோதனன் உணர்ந்திருப்பான்.

என்ன செய்வது, காலம் கடந்த பின்பு- எதுவும் செய்ய முடியாதென்ற சூழ்நிலை உருவாகிய பின்பு உண்மையை உணர்ந்து கொண்டாலும் அதனால் பிரயோசனம் ஏதுமில்லை என்றாகிவிடுகிறது.

இதுபோலத்தான் எல்லாமே. எங்கள் போராட்ட அமைப்புக்கள் சில தீர்மானங்களை எடுத்தபோது அவற்றைத் தவறு என்று நம்மில் யாரேனும் ஒருவர் எடுத்துரைத்திருந்தால்கூட இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும்.

போராட்ட அமைப்புக்களைக் குறைபடுவதாகத் தங்கள் கருத்து இருந்து விடக்கூடாது என்பதிலேயே நம்மவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்களேயன்றி, சரியானதைக் கூறுவதற்கு எவரும் முன்வரவில்லை.

அவ்வாறு முன்வந்திருந்தாலும் போராட்ட அமைப்புக்களின் முடிவு கருத்துரைத்தவருக்குப் பாதகமாகக்கூட இருந்திருக்கலாம் என்பதையும் நாம் நிராகரிக்கவில்லை.

எது எவ்வாறாயினும் இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியின் தவறான அணுகுமுறைகளை யாரெல்லாம் விமர்சிக்கின்றார்களோ அவர்கள் தமிழரசுக் கட்சியைப் பாதுகாக்கப் பாடுபடுகின்றனர் என்பதே பொருளாகும்.

அந்தவகையில் நாமும் தமிழரசுக் கட்சியின் பாதை தவறிய பயணத்தை இங்கு சுட்டிக்காட்டுவது அந்தக் கட்சி சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே. இதற்கு மேலாக, தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியை நம்பி வாக்களித்தனர். அந்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைப்பதாகச் செயற்படுவது எந்தவகையிலும் தர்மமன்று.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற இளங்கோவடிகளின் அறக்கருத்து இங்கு நோக்குதற்குரியது. கண்முன்னே நடப்பது நம் மக்களை ஏமாற்றுகின்ற கபட நாடகம் என்பதை அறிந்தும் அதுபற்றி பேசாதிருப்பது பெரும் பிழை என்பது நம் நிலைப்பாடு. இதனையே இதிகாச புராணங்கள் உலக மக்களுக்கு எடுத்துரைக்கின்றன என்பதைத் தாங்கள் ஒருபோதும் மறுக்கமாட்டீர்கள்.

ஆக, நாம் சொல்லிய மேற்போந்த பொருளின் அடிப்படையில் எங்கள் கருத்தை நோக்குங்கள் என்பதுதான் நம் கோரிக்கை.

இவை ஒருபுறமிருக்க, இப்போது ஐ.நாவில் கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு கலப்பு நீதிமன்றத்தை ஏற்கமுடியாது என்கிறது.

வெளிநாட்டு நீதிபதிகளும் பங்கேற்கக்கூடியதான கலப்பு நீதிமன்றை நிராகரித்தால், முடிவு உள்நாட்டவர்களே விசாரணை நடத்துவதாக இருக்கும்.

உள்நாட்டவர்கள் விசாரணை நடத்தினால் நிலைமை என்னவாக இருக்கும் என்பதை நாம் கூறி நீங்கள் அறிய வேண்டிய தேவை இல்லை.


மன்னாரில் எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் மீதான காபன் பரிசோதனையின் முடிவு 350 தொடக்கம் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட எலும்புக்கூடுகள் என்பதாக இருந்தது.

இரும்புக் கம்பிகளால் கைகட்டி, கால்கட்டிப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு அவற்றின் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்த பின்பு குறித்த எலும்புக்கூடுகள் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதாகப் பரிசோதனை முடிவு அமைகிறது எனில், தமிழினம் எவ்வாறு ஏமாற்றப்படுகிறது என்பது தெளிவாகிறதல்லவா.

நிலைமை இதுவாக இருக்கையில், வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்காத விசாரணை; நடந்தால் என்ன, நடக்காமல் விட்டால் என்ன எல்லாம் ஒன்றுதான்.

(திங்கள் வளரும்)

**2018 நவம்பர் 30 இல் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் உகரத்தில் எழுதிய அரசியல் கடிதத்தில் இணைக்கப்பட்டிருந்த கற்பனைச் சித்திரம் இது...**



# பாரதம்

## பட்டாசு ஆலையில் வெடி விபத்து; ஆறு பேர் சம்பவ இடத்திலேயே பலி!

(மன்னார்குடி)

மன்னார்குடி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மன்னை நகரிலுள்ள நாட்டு வெடிகள் தயாரிக்கும் கட்டடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பணியாளர்கள் நாட்டு வெடிகுண்டு தயாரித்துக்கொண்டிருந்தனர்.

இதன்போது திடீரென ஏற்பட்ட வெடி விபத்தில் ஆலை முழுவதும் இடிந்து தரைமட்டமானது. இதன்போது, அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

## பாலகோட் முகாம் தாக்குதல் பாக். விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டன

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் உள்ளிட்ட பல விமான நிலையங்களை பாகிஸ்தான் அரசு அவசரமாக மூடிய நிலையில், சில பகுதிகளில் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் புதன்கிழமை திரும்பப் பெற்றுள்ளது.

எனினும், நடுவழியில் இறங்கும் விமானங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் பாதுகாப்பு கருதி பாங்கொக், கோலாலம்பூர், டில்லி ஆகிய பகுதிகளில் இருந்துவரும் விமானங்கள் தற்போதைக்கு அனுமதிக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


சுமார் ஒருமாத இடைவெளிக்குப் பின்னர் இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர், குவெட்டா ஆகிய விமான நிலையங்கள் திறக்கப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டு விமானங்கள் தரையிறங்கவும் புறப்பட்டுச் செல்லவும் அனுமதியளிக்கப்பட்டது.

காஷ்மீரிலுள்ள பாலகோட் பகுதிக்குள் கடந்த மாதம் இந்திய விமானப்படைகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் உள்ளிட்ட பல விமான நிலையங்களைப் பாகிஸ்தான் அரசு அவசரமாக மூடியது.

இதேபோல் சில நகரங்களில் உள்ள சர்வதேச விமான நிலையங்களும் உள்நாட்டு விமான நிலையங்களும் மூடப்பட்டன.

கடந்த 27 ஆம் திகதியில் இருந்து சில நகரங்களின் வான் எல்லை வழியாக வெளிநாட்டு விமானங்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. பின்னர், சில முக்கிய விமான நிலையங்கள் ஊடாக மிகக் குறைவான விமான சேவைகள் இயக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு இருவர் பலி; இருவர் படுகாயம்



(சியேட்டல்)

அமெரிக்காவின் சியேட்டல் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், இருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

சியேட்டலில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வோஷிங்டன் போஸ்ட் செய்திகள் கூறியுள்ளது.

துப்பாக்கிதாரி, காரை செலுத்தி சென்ற பெண்ணொருவரை தாக்கிய நிலையில் மேலும் ஒரு பேருந்து சாரதியை தாக்கியுள்ளார்.

எனினும் பாதிக்கப்பட்ட நிலையிலும் பேருந்து சாரதி மிக கவனமாக வாகனத்தை செலுத்தி 12 பிரயாணிகளை காப்பாற்றியுள்ளார்.

பேருந்து சாரதியை தாக்கியதை தொடர்ந்து சந்தேக நபர் மேலும் சிலர் மீது நடத்திய தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தேகநபர் கடும் சவாலுக்கு மத்தியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இலக்குகள் எதுவும் இன்றி முட்டாள்தனமாக இதுபோன்ற தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என பொலிஸாரின் முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரியின் நோக்கம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## பஸ்-லொறி மோ 15 பேர் உடல் ந

(நைரோபி)

கென்யா நாட்டில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பேருந்து விபத்தில் குழந்தை, பெண்கள் உட்பட 15 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர்.

கென்யா நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள மண்டேரா பகுதியிலிருந்து நைரோபி நோக்கி பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. நேற்று அதிகாலை 5 மணியளவில் மசாகோஸ் பகுதியில் வந்தபோது லொறி மீது வேகமாக மோதியது.



## செயற்கைக்கோளை சுட்டு வ விண்வெளியில் ஆ உருவாக்கக் கூட

(இல்லாமாபாத்)

விண்வெளி என்பது மனித குலத்தின் பொதுவான பகுதி. அதை இராணுவமயமாக்கக்கூடிய செயல்களை தவிர்க்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு நாட்டுக்கும் இருக்கிறது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

செயற்கைக்கோள் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தும் சோதனையை இந்தியா நடத்



## புல்வாமா தாக்குதல் மேலும் ஆதாரங்களை

### -பாகிஸ்தான் அரசு கோரிக்கை-

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்தில் 45 வீரர்கள் கொல்லப்பட்ட தாக்குதல் தொடர்பாக ஜெய்ஷ் இ முஹம்மது இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க மேலும் ஆதாரங்களை அளிக்குமாறு பாகிஸ்தான் அரசு கேட்டுள்ளது.

காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி ஜெய்ஷ் இ முஹம்மது பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவன் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் சி.ஆர்.பி.எப். படை வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார், தாக்குதல் நடத்திய தற்கொலைப்படை பயங்கரவாதி மற்றும் உறுதுணையாக இருந்தவர்கள் பாகிஸ்தானிலிருந்து இயங்கிவரும் ஜெய்ஷ் இ முஹம்மது பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்பது தேசிய புலனாய்வுத்துறை அதிகாரிகளின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கான ஆதாரங்களை இந்திய அரசு கடந்த மாதம் 27 ஆம் திகதி பாகிஸ்தான் அரசிடம் ஒப்படைத்து அங்கு இருக்கும் மசூத் அசார் உட்பட 22 பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தது. மேலும், எல்லைப்பகுதியில் இயங்கிவரும் பயங்கரவாத முகாம்கள் தொடர்பாக இந்திய அரசிடம் உள்ள உளவுத்துறை தகவல்களும் பாகிஸ்தானுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்திய அரசு அளித்துள்ள ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. அவர்கள் அனுப்பிய தகவலில் இவர்

# வெளிநாடு

## கோர விபத்து
## நசுங்கி பலி!



இந்த விபத்தில் 12 ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 15 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். (7)

## இரு பேருந்துகள் மோதல்; 8 பேர் பலி, பலர் படுகாயம்

(டாக்கா)

பங்களாதேஷில் இரண்டு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

பங்களாதேஷில் சாட்டோ கிராம்- காக்ஸ் பஜார் நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு மினி பஸ் சென்று கொண்டிருந்தது. லோககாரா உபாசிலா என்ற இடத்தில் சென்றபோது மினிபஸ் மீது எதிரே வந்த மற்றொரு பேருந்து பயங்கரமாக மோதியது. இதில் மினிபஸ்ஸின் முன்பகுதி கடுமையாக சேதம் அடைந்தது.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.




இந்த விபத்தில் மினி பஸ்ஸில் பயணித்த 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 25 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (7)

## வீழ்த்தி இந்தியா சோதனை
## ஆயுத போட்டியை
## டாது-பாகிஸ்தான்

தியது பற்றி பாகிஸ்தான் கருத்துத் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் முகமது பைசல் கூறியதாவது,

விண்வெளி என்பது மனித குலத்தின் பொதுவான பகுதி. அதை இராணுவ மயமாக்கக்கூடிய செயல்களை தவிர்க்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு நாட்டுக்கும் இருக்கிறது.

விண்வெளியில் ஆயுதப் போட்டியை தடுப்பது தொடர்பான ஐ.நா. தீர்மானத்தை பாகிஸ்தான் முழுமையாக ஆதரிக்கிறது.

எனவே, கடந்த காலங்களில் இதேபோன்ற சோதனையை பிற நாடுகள் செய்தபோது கண்டித்த நாடுகள் எல்லாம் விண்வெளிக்கான இராணுவ அச்சுறுத்தலை தடுக்கும் செயல்களில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கிறோம் என மேலும் தெரிவித்தார். (7)

## மசூத் அசாரை கறுப்புப் பட்டியலில் வைக்க அமெரிக்கா புதிய முயற்சி

(வோஷிங்டன்)

ஐ.நா. பாதுகாப்பு சபையின் கறுப்புப் பட்டியலில் ஜெய்ஷ் இ முகம்மது இயக்கத் தலைவர் மசூத் அசாரை வைக்க அமெரிக்கா புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திததி நடந்த தற்கொலைத் தாக்குதலில் துணை இராணுவப் படையைச் சேர்ந்த 44 வீரர்கள் உடல் சிதறி பலியாகினர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இருந்து இயங்கி வரும் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன. இதனை தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய 3 நாடுகளும் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கத்தின் தலைவன் மசூத் அசாரை சர்வதேச பயங்கரவாதியாக அறிவித்து, ஐ.நா.பாதுகாப்பு சபையின் கறுப்பு பட்டியலில் வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. ஆனால் சீனா தனது வீட்டோ அதிகாரததைப் பயன்படுத்தி, இந்த முயற்சிக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது.

இந்நிலையில், மசூத் அசாரை ஐ.நா. பாதுகாப்பு சபையின் கறுப்புப் பட்டியலில் சேர்க்க அமெரிக்கா புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக



பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு வரைவு தீர்மானத்தை அனுப்பியுள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேறினால் மசூத் அசாருக்கு எதிராக ஆயுத தடை, பயணத் தடை விதிக்கப்படுவதோடு அவரது சொத்துக்களும் முடக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## தொடர்பாக
## அளிக்கவும்

களுக்கெல்லாம் தொடர்பிருப்பதாக கருதப்படுவதாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அதிகாரிகள் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

இவ்விவகாரத்தில் பாகிஸ்தானில் உள்ளவர்களுக்கு தொடர்பு இருப்பதை நிரூபிக்கும் வகையில் நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் முன்னர் அளித்திருந்த வாக்குறுதியின்படி, புல்வாமா தாக்குதல் தொடர்பாக இந்தியா அளித்திருந்த ஆதாரங்களின் அடிப்படையில் அந்நாட்டு அதிகாரிகள் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவல்கள் நேற்று இந்தியத் தூதரிடம் பரிமாறப்பட்டது.

இவ்விசாரணையை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்தியாவிடமிருந்து மேலும் சில ஆதாரங்கள் கோரப்பட்டுள்ளன என பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (7)

## பிரெக்சிற் விவகாரம் தொடர்பான எம்.பிக்களின் 8 மாற்றுத்திட்டங்களும் நிராகரிப்பு-பிரிட்டன் பாராளுமன்றம்

(லண்டன்)

பிரெக்சிற் ஒப்பந்தம் தொடர்பாக எம்.பிக்கள் கொண்டு வந்த 8 மாற்றுத் திட்டங்களையும் பிரிட்டன் பாராளுமன்றம் நிராகரித்துவிட்டது.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து பிரிட்டன் வெளியேறும் 'பிரெக்சிற்' நடவடிக்கையின் காலக்கெடு இன்று 29 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனால் பிரெக்சிற்றுக்காக ஐரோப்பிய கூட்டமைப்புடன் பிரிட்டன் பிரதமர் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந்தத்தை 2 முறை அந்நாட்டு பாராளுமன்றம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் நிராகரித்துவிட்டது.

அத்துடன் ஒப்பந்தம் இல்லா 'பிரெக்சிற்' தீர்மானமும் 2 முறை நிராகரிக்கப்பட்ட நிலையில், பிரெக்சிற்றை தாமதப்படுத்துவதற்கான தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. இதனால் பிரெக்சிற்றின் காலக்கெடுவை நீட்டிக்க வேண்டுமென தெரசா மே ஐரோப்பிய கூட்டமைப்பிடம் கோரிக்கை வைத்தார். இதனை ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர் டொனால்ட் டஸ்க் ஏற்றுக் கொண்டார்.

"பிரெக்சிற் ஒப்பந்தத்தை பிரிட்டன் பாராளுமன்றம் ஆதரித்தால் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து வெளியேற மே மாதம் 22 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்படுகிறது. மாறாக அந்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதிக்குள் வெளியேறியாக வேண்டும்" என்று டொனால்ட் டஸ்க் கூறியுள்ளார்.

இதற்கிடையே, பிரெக்சிற் விவகாரத்திற்கு அறுதிப் பெரும்பான்மை அளிக்கக்கூடிய ஒப்பந்தத்தை முடிவு செய்வதற்காக முன்னெப்போதும் இல்லாத வகையில் பிரிட்டனின் பாராளுமன்றத்தின் நடவடிக்கையை எம்.பிக்கள் வாக்கெடுப்பின் மூலம் தங்களது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தனர். உறுப்பினர்கள் எடுக்கும் முடிவை ஏற்றுக்கொள்வது தொடர்பாக எவ்வித உத்தரவாதத்தையும் அளிக்க முடியாது என்று பிரதமர் தெரசா மே தெரிவித்தார்.



இந்த பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில், பிரெக்சிற் தொடர்பாக நேற்று முன்தினம் 8 மாற்று ஒப்பந்தங்களை எம்.பிக்கள் முன் வைத்தனர். ஆனால் இந்த ஒப்பந்தங்களுக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. (7)

# சர்வாதிகார ஆட்சிக்கு முயற்சி

## அரச தரப்பு மீது திஸ்ஸ பாய்ச்சல்



(கொழும்பு)

தேர்தல்கள் எதனையும் நடத்தாது சர்வாதிகார ஆட்சியை உருவாக்க அரச தரப்பு முயற்சிப்பதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினூடாகப் போராடும் உரிமை பறிக்கப்படுமெனவும் எதிர்க் கட்சியினரின் கூட்டங்களின் போது, பொலிஸாருடன் முரண்படுவது, பயங்கரவாதச் செயற்பாடாக கருதப்பட்டு கட்சியை நீக்குவதற்கும் இடமிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சாரதி போதைப்பொருள் பயன்படுத்தினால் பேருந்தின் அனுமதி இரத்து செய்யப்படும்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், போதைப் பொருளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் அந்தப் பேருந்தின் பயணிகள் போக்குவரத்து அனுமதிபத்திரம் இரத்துச் செய்யப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் துசித குலரத்ன விடுத்துள்ளார். ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை பின்பற்றப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

## போதைப்பொருள் கடத்தல் விவகாரம்

# 7 மணிநேர விசாரணையின் பின் நதீமல் பெரேரா விடுதலை!



(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் 7 மணிநேர விசாரணைகளின் பின்னர் அமல் பெரேராவின் மகன் நதீமல் பெரேரா விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் போதைப்பொருள் கடத்தல்காரரான மாகந்துரே மதூசுடன் கைது செய்யப்பட்ட பிரபல பாடகர் அமல் பெரேராவின் மகன் நதீமல் பெரேரா மற்றும் சிறைச்சாலை அதிகாரி லலித் குமார ஆகியோர் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் நேற்று முன் தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த மேற்படி இருவரையும் விமான நிலைய சுங்கப் பிரிவினர், தேசிய உளவுத் துறை மையம் ஊடாக விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து, நதீமல் பெரேரா மற்றும் லலித் குமார ஆகியோரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவினரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் இணைந்து விசேட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்த விசாரணைகள் பிற்பகல் 3.00 மணிவரை தொடர்ந்ததாகவும் அதனையடுத்து சுமார் 7 மணி நேர விசாரணையின் பின்னர் நதீமல் பெரேரா விடுவிக்கப்பட்டதாகவும் எனினும் சிறைச்சாலை அதிகாரி லலித் குமார மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)

# காலைவாரிய தரப்பினருடன் மீண்டும் இணையக்கூடாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



(களனி)

காலைவாரிய தரப்பினருடன் மீண்டும் இணையக்கூடாது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.தெரிவித்துள்ளார்.

களனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், 'ஐ.தே.கவின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே செயற்பட்டு வருகிறார். ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அவரே களமிறங்க வேண்டும். பிரதமர் ரணிலை நிச்சயம் நாம் வெற்றி பெறவைப்போம்.

அதேவேளை, தேசிய அரசு உதயமாவதற்கு நான் எதிர்ப்பை வெளியிடவில்லை. ஆனால், காலைவாரிய தரப்பினருடன் மீண்டும் இணையக்கூடாது.

இரவில் விழுந்த குழியில், பகலில் விழக்கூடாது என்பது தான் எனது நிலைப்பாடாகும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஐ.தே.க.விரைவில் அறிவிப்பு

(கொழும்பு)

தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த அறிவிப்பு எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்ர இந்துனில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிலர் செய்வதைப் போன்று, கட்சியின் வேட்பாளர் யார் என்பதை குடும்பத்தாருடன் கலந்துரையாடி ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் தீர்மானிக்காது எனவும் அவர் தெரிவித்தார். கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து ஆராய்ந்தே முடிவுகள் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் எனவும் துஷார இந்துனில் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கண்ணீர்

ஒரு மனிதன் இந்த உலகத்திற்கு வந்து சேர்ந்தவுடனே அவன் செய்கின்ற முதல் காரியம் அழுகை தான்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அது ஆணா? பெண்ணா? கறுப்பா? சிவப்பா? எனப் பார்ப்பதற்கு முன் அக்குழந்தை கத்துகின்றதா? இல்லையா? என்று பார்ப்பதுதான் மிகவும் முக்கியம்.

பிறக்கும் போது அவன் அழவேண்டும்! போகும் போது மற்றவர்களை அழ வைக்க வேண்டும்! அப்படி இருப்பவன் தான் நல்ல மனிதன்! வாழ்வாங்கு வாழ்வது என்றால் இதுதான்!

ஒருவர் இறந்தவுடன் 'அப்பாடா இவன் இறந்து விட்டானா' என எல்லோரும் நிம்மதியாக இருந்தால் அவன் நல்ல மனிதன் கிடையாது!

அழுவதால் என்ன சௌகரியம் எனப் பார்க்கலாம். அழுவதால் சௌகரியமா? ஆமாம்!

உலக சுகாதார நிறுவனம் WHO அதுதான் W(orld health Organisation) அதிலுள்ள வைத்தியர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

அழுகை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு வழி. கண்ணீர் எப்பொழுது வரும்? அதிகப்படியான ஆனந்தத்தில் இருக்கும் போது வரும்! அதிகப்படியான துயரத்திலே இருக்கும் போதும் வரும்!

எல்லோருக்கும் துன்பம் வருவது இயற்கைதான்! சிலவேளை தாங்க முடியாத துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

ஆழ்ந்த துன்பத்தில் இருக்கும்போது கண்ணீரை அடக்கி வைத்தால் அது நமது உடலுக்கு தீங்கை உண்டாக்கும்.

வைத்தியர் எரிக்லிண்டர்மே என ஒருவர் இருந்தார். அவர் ஒரு மனநோய் நிபுணர். அமெரிக்காவிலுள்ள ஒரு பொது வைத்திய சாலையில் பணிபுரிகிறார்.

அவர் ஒரு உதாரணம் சொல்கிறார்.

ஒரு இளம் தாதியினுடைய அப்பாவிற்கு தீராத நோய். அவரை வைத்தியசாலையில் சேர்த்திருந்தார்கள். அவரது மகள் தாதி என்பதால் அவரைப் பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டார்.

திடீரென அவர் இறந்து போய்விட்டாராம்! இந்தப் பெண்ணுக்கு மிகவும் வருத்தம். என்ன இருந்தாலும் அவருடைய அப்பா வில்லையா! ஆனால் அவர் தாதியாக இருந்து பழக்கப்பட்டதால் துக்கத்தை வெளியில் காட்டவில்லையாம்! மனதுக்குள் போட்டு அடக்கி வைத்திருந்தாராம்! கடைசியில் என்ன ஆனது தெரியுமா? அவரது அப்பா இறந்து நான்கு மணிநேரத்தில் இந்தப் பெண்ணுக்கு வயிற்று வலி ஏற்பட்டு இந்தப் பெண்ணும் இறந்து விட்டார். எம் ஊரில் சவலிக்கு மாரடிக்கிறது என ஒரு பழமொழி உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சில இடங்களில் யாராவது இறந்து விட்டால் ஒப்பாரி வைத்து அழுவதற்கு காசு கொடுத்து ஆட்களைக் கூப்பிடுவார்கள். அதற்கென சிலபேர் இருக்கிறார்கள். இப்படி செய்வது எதற்கு என நினைக்கிறீர்கள்? இறந்தவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள்; அவர்கள் துக்கத்தை அடக்கி வைத்திருப்பார்கள்! அப்படி யாராவது இருந்தால் அவர்கள் இந்த ஒப்பாரியைப் பார்த்ததும் அழுதுவிடுவார்கள். அவர்களது மனப்பாரம் குறையும். கண்ணீரை அடக்கி வைத்திருப்பதால் என்ன பிரச்சினை வருமென கண்டுபிடிச்சு சொல்லியிருக்கிறார்கள். ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி என்பன வரலாம்! அமெரிக்காவில் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கு! அங்கு 'பீட்டர் கேஸல்' ஒருவர் இருந்தார். இவர் கண்ணீரைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார். இதற்காக Tear Analysis Laboratory ஒன்று அங்கே இருந்தது. அதாவது இரத்தப் பரிசோதனை நிலையம் மாதிரி கண்ணீர் பரிசோதனை நிலையம்! கண்ணீரை பரிசோதனை செய்து பார்த்தால் பல உடல் கோளாறுகளைக் கண்டு பிடிக்கலாமாம்! ஒருவர் அழும் போது வரும் கண்ணீரை Collect பண்ண வேண்டும். சாதாரணமாக வரும் கண்ணீர் Basal tears, உண்மையான அழுகையில் வரும் கண்ணீர் Reflex tears. இவை இரண்டும் கலந்தால் Composition மாறிப்போய் விடும்.

அதனால் Result கிடைப்பது கஷ்டம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால் கண்ணீரை சோதிக்க ஒருத்தர் வருகிறார் என வைத்துக் கொள்வோம். உடனே அவருக்கு ஒரு அடி கொடுக்க வேண்டும். வலி தாங்காமல் அவர் உடனே அழுவார். அப்போது வரும் கண்ணீரை சேகரிக்க வேண்டும். அதுதான் உண்மையான Sample அல்லது Fees எவ்வளவு என சொல்லி Bill ஐ அவர் கையில் கொடுக்க வேண்டும். உடனே Sample எடுக்கலாம்! Lucy Freeman என ஒரு அம்மா Fight against tears என ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அவருக்கு கடுமையான ஜலதோஷம் இருந்ததாம்... Sinus trouble வேற இருந்ததாம். அவர் உணர்ச்சிகளை அடக்கி வைக்காமல் கத்திக் கத்தி இவ் இரண்டு பிரச்சினைகளையும் சரி செய்து விட்டார்களாம்! சர்வதேச மருத்துவ குழு என்ன சொல்கின்றது தெரியுமா? Tension குறைய வேண்டும் என்றால் எல்லோரும் சேர்ந்து அழ வேண்டும் என சொல்கின்றது! Hyper tension, Peptic Ulcer என்பவையும் சரியாகப் போய்விடுமாம்! இன்னும் கொஞ்ச நாளில் வைத்தியசாலைகளிலும் அழுவதற்குப் பயிற்சி கொடுப்பதற்கு தனிப் பிரிவே வரலாம் என சொல்கின்றார்கள்!

# மோசமான மனித உரிமை மீறல்கள் எதுவும் 2015 இற்குப் பின் இலங்கையில் இல்லை

## பிரதியமைச்சர் பரணவிதான விளக்கம்

(கொழும்பு)

"கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோசமான மனித உரிமை மீறல்கள் எதுவும் நாட்டில் நிகழவில்லை" என திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில்,

கேள்வி: ஒரு நாட்டை அபிவிருத்தி செய்வதாயின் தொழில் திறன் அபிவிருத்தி மிக முக்கியமாகும். அதற்காக உங்களது அமைச்சு எவ்வாறான பங்களிப்பை வழங்குகின்றது?

பதில்: எமது தொழிலாளர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவது பெரும் சவாலாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் எமது தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு ஒரு இலட்சம் பேரையே இணைத்துக்கொள்ள முடியும் என்பதனாலாகும். வருடமொன்றுக்கு ஒரு இலட்சம் பேரளவில் வெளிநாடுகளில் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு எமது நாட்டில் தொழிற்பயிற்சி கிடைப்பதே இல்லை. தனியார் துறையிலும் அரச துறையிலும் புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுமில்லை.



இந்தச் சவாலை வெற்றி கொள்ளக் கூடிய வகையில் பாடநெறிகளை நவீனப்படுத்தி புதிய பாடநெறி அறிமுகம் செய்வதும், இந்தப் பயிற்சிகளை கற்று சான்றிதழ்களை பெற்றுக் கொடுப்பதையே நாம் செய்கின்றோம். தேசிய ரீதியில் பாரியளவிலான தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஒருகொடவத்த, ஹிங்குராங்கொட, மஹர, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் அவை அமைக்கப்படுகின்றன. இலங்கை பூராகவும் உள்ள தொழிற்பயிற்சி கல்லூரிகளை நவீனமயப்படுத்தி வருகின்றோம். தேசிய வேலைவாய்ப்புச் சந்தையையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையையும் இலக்காகக் கொண்டு தொழிற்பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கின்றோம்.

கேள்வி: தச்சுத் தொழில், கொத்தனார், வெல்டிங் போன்ற பாடநெறிகளுக்கு மாணவர்களை கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளதாக ஆலோசகர்கள் கூறுகின்றார்கள். ஏன் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது?

பதில்: சில பாடநெறிகள் கட்டாயம் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக தச்சுத் தொழிலாளர் என்பவர் மெஷின் ஒபரேட்டர் ஆவார். இன்று வீட்டுத் தளபாடங்களை செய்வது என்பது முற்றிலும் இயந்திரமயப்படுத்தப் பட்டுள்ளது. இயந்திரம் மூலம் வெட்டி, மெருகூட்டி தளபாடம் செய்வதற்கு பெரியளவில் பயிற்சி தேவையில்லை. எமது பழைய தச்சுத் தொழிலாளி கூட அதனை தயாரிப்பார். நவீன தொழில் நுட்பத்துடன் அனைவரையும் கவரக்கூடியவாறு முன் வைக்கப்படும் பாடநெறிகளுக்கு பிள்ளைகள் வருகை தருவார்கள். மாத்தளையில் நடைபெற்ற அவ்வாறான பயிற்சி நெறியில் அதிகளவு இளைஞர், யுவதிகள் பங்கு கொண்டார்கள்.

கேள்வி: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அணியினர் இம்முறை வரவு-செலவுத் திட்டத்துக்கு வாக்களிக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என எண்ணுகின்றீர்கள்?

பதில்: அவர்கள் கடந்த காலங்களில் இருந்த அரசியல் குழப்பங்களால் அரசாங்கத்தை விட்டு விலகினாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்திலுள்ள நன்மைகளை அறிந்துள்ளார்கள் என எண்ணுகின்றேன். அதேவேளை அவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நாடகத்தில் நடிக்கத் தயாரில்லை என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தார்கள். அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் முன்னேற்றகரமான அரசியல் முடிவுகளை எடுப்பார்கள் என நம்புகின்றேன். அதற்கான நல்ல சகுனங்களே எமக்குத் தெரிந்தன.

கேள்வி: இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக அரசாங்க அமைச்சர்கள் 51 நாள் மகிந்த அரசாங்கத்தையே குற்றம்சாட்டுகின்றார்கள். அந்தக் குற்றச்சாட்டு சரியானதென எண்ணுகின்றீர்கள்?

பதில்: எமது பொருளாதார கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகள் ஒன்று இரண்டு அரசாங்கங்களால் ஏற்பட்ட பிரச்சினையில்லை. எழுபது எண்பதுகள் தொடக்கம் ஏற்பட்டவையாகும். எமது அரசாங்கத்திலும் சில பிரச்சினைகள் உள்ளன. 2015 ஆம் ஆண்டு மக்களிடம் முன்வைத்த பல விடயங்களை எம்மால் முற்றாக நிறைவேற்ற முடியாமல் போனது. நாம் அவற்றை மறைக்கவில்லை. குற்றவாளிகளை பாதுகாக்கவில்லை. இந்த அரசாங்கத்தின் பிழைகளை எதிர்க் கட்சியினரும் விமர்சித்தார்கள். அதுதான் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றமாகும்.

ஆனால் 51 நாள் அரசாங்கத்தில் நடந்தவைகள் அவற்றை விட மிக மோசமானமாகும். அக்காலப் பகுதியில் பல பில்லியன் டொலர்கள் எமது நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டன.

கேள்வி: பில்லியன் அளவிலான டொலர்கள் இழக்கப்பட்டதென எவ்வாறு கூறுகின்றீர்கள்?

பதில்: இந்த அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக நாட்டிற்கு வரவிருந்த முதலீடுகள் நிறுத்தப்பட்டன. பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது. கம்பரெலிய திட்டத்தை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். சூழ்ச்சியான அரசாங்கத்தின் முதல் நடவடிக்கை கம்பரெலியவை நிறுத்தியதாகும். அபிவிருத்தி வீழ்ச்சியடைந்தது. அதன் செலவு இன்னும் கணக்கிடப்படவில்லை. நாடு பாரியளவு பின்னடைவைச் சந்தித்தது. அதற்கு அந்த அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

கேள்வி: 51 நாள் அரசாங்கத்தை குறை கூறுவது ஐ.தே. கட்சி அரசாங்கம் தங்களது இயலாமையை மூடி மறைக்கவே என எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றாரே?

பதில்: முன்னர் இந்த நாட்டில் வெள்ளை வான் கலாசாரம் காணப்பட்டது. அதன் மூலம் அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை மரணத்தை நோக்கி கொண்டு சென்றார்கள். இன்று நாட்டில் இரவில் வெள்ளை வான் வருவதில்லை. இன்று பகலிலும் இரவிலும் இலங்கை பூராகவும் ஓடும் பச்சை வான்கள் உள்ளன. 1990 என உள்ளன. அதுதான் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட அம்புலன்ஸ் சேவையாகும். அந்த அம்புலன்ஸ் மூலம் மக்களை வாழவைக்க அழைத்துச் செல்கின்றார்கள். ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் அவர்களை "றோ" உளவாளிகள் எனக் கூறினார்கள். வைத்தியர்கள், சாரதிகள், தாதியர்களை இந்தியாவிலிருந்தே அழைத்து வருவார்கள் எனக் கூறினார்கள்.

கேள்வி: ஜெனிவா மனித உரிமைகள் சபையில் எடுத்த முடிவுகள் தொடர்பாக அரசாங்க அமைச்சராக என்ன எண்ணுகின்றீர்கள்?

பதில்: ஜெனிவாவில் இனவாதத்தைத் தூண்ட எதிர்க்கட்சியினர் தயாரானார்கள். அதற்காக சூழ்ச்சி செய்தார்கள். ஆனால் அரசாங்கம் நாட்டின் இறைமையையும் தேசிய அபிலாஷையையும் பாதுகாத்தே 2015 தொடக்கம் ஜெனிவா நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்தது. எதிர்க்கட்சியினர் மற்றும் தமிழ் டயஸ் போராவின் தாளத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு ஆடுகின்றது. அதற்கு அரசாங்கமும் ஆதரவளிக்கின்றது என்று கூறினார்கள். எமது நாட்டின் மனித உரிமைகள் காக்கப்படுவது ஜெனிவாவுக்காக அல்ல. எமக்கே அது நல்லது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோசமான மனித உரிமை மீறல்கள் எதுவும் நிகழவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்சிகளின் பெரும் ஆதரவுடனேயே ஜனாதிபதி வேட்பாளர் களமிறக்கம்

## சு.க.அதிருப்திக்குழு அறிவிப்பு



(கொழும்பு)

கட்சிகளின் பெரும் ஆதரவுடனேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் களமிறக்கப்படுவார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அதிருப்திக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன-ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக அவர் இருப்பார் என அதிருப்திக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினரான திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் தலைவர் களமிறங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இது எமது உரிமையும் கூட. அதேபோல், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு அவர்களது தலைவரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கும் உரிமையுள்ளது.

நாட்டு மக்கள் ஜனாதிபதி வேட்பாளரை விட, நாட்டுக்கு முக்கியமான தலைவர் ஒருவரையே எதிர்பார்க்கிறார்கள். பொருளாதாரம், அபிவிருத்தி, கலாசாரம் ரீதியாக புதிய மாற்றமொன்று ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதற்காகவே, நாம் கூட்டணி அமைத்து களமிறங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாட்டை மீண்டும் வெற்றிப் பாதைக்கு கொண்டுசெல்ல வேண்டும். இதனாலேயே, நாம் அவசரப்பட்டு ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக கலந்துரையாடாமல் இருக்கின்றோம். எவ்வாறாயினும், எமது கூட்டணி இணக்கப்பாட்டுடன் ஒரு பலமான வேட்பாளரைக் களமிறக்கும்.

நாட்டு மக்கள், புதிய அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை மேற்கொள்ள வேண்டியது எமது கடமையாகும். தேசிய ரீதியான ஒரு பிரச்சினையாகவே நாம் இதனைக் கருத வேண்டும். இனியும் இந்த அரசாங்கத்தை நம்ப முடியாது.

இதனாலேயே நாம், பொது ஜன பெரமுனவுடன் இணைந்து பேச்சு நடத்தி வருகிறோம். இது தொடர்பாக தற்போது 20 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு பேச்சுக்களை நடத்தி வருகின்றோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்தடைக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்-ரணில்

(கொழும்பு)

மின்சாரத் தடைக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஆளும் கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்குத் தேவையான மின்சார வசதியை அரசாங்கம் என்ற ரீதியில் தொடர்ச்சியாக வழங்க வேண்டும். குறித்த கடப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

மக்களுக்கு இடையறாது மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இயற்கை எரிவாயு மின்சக்தி நிலையங்களை அமைப்பது தொடர்பில் இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என ரணில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாகன விபத்தில் மனைவி பலி கணவன் வைத்தியசாலையில்

தங்கொட்டுவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அவரது கணவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தங்கொட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் தங்கொட்டுவ சந்தைக்கு அருகில் டிப்பர் ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பிரபாகரன் இழந்த மனிதவுரிமை மாத்திரமே சர்வதேசத்திற்கு புலப்படுகிறது-ஜனாதிபதி

(களுத்துறை)

மனித உரிமை, ஜனநாயகம், சுதந்திரம் என்பன குறித்து பேசுபவர்களும் பிரதானமாக அரச சார்பற்ற நிறுவனங்களும் யுத்தகாலத்தில் பிரபாகரன் இழந்த மனித உரிமை குறித்து மாத்திரமே பேசுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறை, மீகஹதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கை பொலிஸ் படையினர் தங்கள் உயிரைத் தியாகம் செய்து பெரும் பங்காற்றியிருந்தனர்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தின்போது 1980 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் 750இற்கும் அதிகமான பொலிஸார் ஒரு இரவில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்.

இன்று மனித உரிமை, ஜனநாயகம், சுதந்திரம் என்பன குறித்து பேசுபவர்களும் பிரதானமாக அரச சார்பற்ற நிறுவனங்களும் யுத்தகாலத்தில் பிரபாகரன் இழந்த மனித உரிமை குறித்து மாத்திரமே பேசுகின்றனர். மனித உரிமை என்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

சர்வதேசத்தின் ஊடாக வந்திருக்கும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு எமக்கு சேவை வழங்குவதற்காக வரவில்லை. கடல் கடந்த இன்னும் செயற்பாட்டில் இருக்கும் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு சேவை செய்யவே இவை அமைக்கப்பட்டிருக்கின்றன" எனத் தெரிவித்தார். (இ-7)






கொழும்பில் நடைபெற்ற மென்திறன் விநாடி வினா போட்டியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் இரு அணிகள் பங்குபற்றி 3 ஆம், 6ஆம் இடத்தைப் பெற்றுள்ளன. இப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற அணியே மாகாண மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (படங்கள்: ஈச்சமோட்டை செய்தியாள்)

## நாடு கடத்தப்பட்ட

# கஞ்சிபான இம்ரான் உள்ளிட்ட மூன்று பேர் இலங்கையில் கைது

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷ்டன் டுபாயில் கைது செய்யப்பட்ட கஞ்சிப்பான இம்ரான் டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்டதையடுத்து அவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் இணைந்து அவரிடம் தற்சமயம் விசாரணை செய்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கஞ்சிபான இம்ரானுடன் சேர்த்து மூவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடு கடத்தப்பட்ட கஞ்சிப்பான இம்ரான் உள்ளிட்ட குழுவினர் இலங்கை விமான நிலையத்திலிருந்து மாலைதீவுக்கு செல்லவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷ்டன் டுபாயில் கைது செய்யப்பட்ட பிரபல பாடகர் அமல் பெரேராவின் மகன் நதீமல் பெரேரா மற்றும் சிறைச்சாலை அதிகாரியான கோதாகொட ஆராச்சிகே லலித் குமார ஆகிய இருவரும் நேற்று முன்தினம் டுபாயில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சிறிமாவோவின் உருவப்படம் திறப்பு



(கொழும்பு)

மாற்றங்களை உருவாக்கிய இலங்கைப் பெண்களை கௌரவிக்கும் வகையில் பாராளுமன்றக் கட்ட டத் தொகுதியில் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டன. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவின் உருவப்படத்தை சபாநாயகர் கரு ஜெயசூரிய திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.(இ-7)

# மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக யசந்த கோத்தாகொட



(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக யசந்த கோத்தாகொட பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

இவருடைய நியமனத்திற்கு கடந்த 24 ஆம் திகதி அரசியலமைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்நிலையில், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சட்டத்துறையில் நீண்ட அத்தியாயத்தைக் கொண்ட யசந்த கோத்தாகொட, மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் மற்றும் ஜனாதிபதி ஆலோசகராக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மதூஷின் சின்னம்மாவால் தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றால் நிராகரிப்பு



(கொழும்பு)

மாகந்துரே மதூஷை கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதை தடுக்குமாறு கோரி அவரின் சின்னம்மாவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவின் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லதீப், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.

1989 ஆம் ஆண்டு மாகந்துரே மதூஷின் தாய் கொலை செய்யப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து சிறுவயதில் இருந்து அவரின் சின்னம்மர்வால் மதூஷ் வளர்க்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 110 | 110 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 70 | 100 |
| தக்காளி | 80 | 60 | 60 | 45 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 110 | 110 | 80 |
| கோவா | 60 | 60 | 60 | 60 | 60 |
| கரட் | 70 | 60 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 35 | 40 |
| புடோல் | 100 | 80 | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 100 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 130 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 90 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 50 | 70 | 60 | 35 | 60 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 70 | 100 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 250 | 250 | 200 |
| போஞ்சி | 100 | 110 | 130 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | — | 40 | 40 |
| கீரை – 1பிடி | — | 40 | 50 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 140 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 120 | — | — | — | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 25 | 20 |
| ஈரப்பலா | — | — | — | 110 | 80 |

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

207



“ கல்விக்கான நன்கொடைத் திட்டம் வெஸ்லியன் மிஷனையும் தமது கல்விச் செயற்பாடுகளைக் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்க ஊக்குவித்தது. 1865 இல் வடமாகாணத்தில் வெஸ்லியன் மிஷன் 1194 மாணவர்களைக் கொண்ட 32 பாடசாலைகளைக் கொண்டிருந்தது. 1878அளவில் அவர்கள்மொத்தமாக 9734 மாணவர்கள் கற்கும் 140 பாடசாலைகளை நிர்வகித்தனர் ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

1870 இல் அமெரிக்கன் சிலோன் மிஷனரிமாரின் நிர்வாகத்தின் கீழ் 1453 பிள்ளைகளைக் கொண்ட 51 பொதுப்பாடசாலைகள் இருந்தன. 1875 இல் இத்தொகை 121 ஆக உயர்ந்து 5584 மாணவர்களைக் கொண்டதாக இருந்தது.

1875 இலிருந்து பாடசாலைகளில் பிள்ளைகள் சேர்வது பிரமிக்கத்தக்கவகையில் அதிகரித்தது. இதன் விளைவாக 1878 இல் அமெரிக்கன் சிலோன் மிஷனரி நிர்வாகத்தின் கீழ் 8120 மாணவர்களைக் கொண்ட 135 பாடசாலைகள் இருந்தன.

கல்விக்கான நன்கொடைத் திட்டம் வெஸ்லியன் மிஷனையும் தமது கல்விச் செயற்பாடுகளைக் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விஸ்தரிக்க ஊக்குவித்தது.

1865 இல் வடமாகாணத்தில் வெஸ்லியன் மிஷன் 1194 மாணவர்களைக்கொண்ட 32 பாடசாலைகளைக் கொண்டிருந்தது.

1878 அளவில் அவர்கள் மொத்தமாக 9734 மாணவர்கள் கற்கும் 140 பாடசாலைகளை நிர்வகித்தனர். 25 வருட காலத்தில் (1865- 1889) பாடசாலைகளின் எண்ணிக்கை நாலரை மடங்காகக் பெருக மாணவர் அனுமதியில் எட்டு மடங்கு அதிகரிப்பு காணப்பட்டது. கல்விச் சேவைகளில் இந்தக் கட்டம் ஒரு அசாதாரண துரித வளர்ச்சியைக் கண்டது.

திருச்சபை மிஷனரிச் சங்கத்தின் கல்வித் திட்டமும் இதே போக்கைக் காட்டுகின்றது. 1868 இல் அவர்களின் கட் டுப்பாட்டின் கீழ் 1358 மாணவர்களைக் கொண்ட 26 பாடசாலைகள் இருந்தன.

1878 இல் 2572 மாணவர்களைக் கொண்ட 52 பாடசாலைகள் இருந்தன.இத்தொகை மேலும் அதிகரித்து 1897 இல் 3234 மாணவர்களைக் கொண்ட 67 பாடசாலைகள் இருந்தன.

குறிப்பாக வடமாகாணத்தில் ஆரம்ப ஆங்கில சுயபாஷைக் கல்வியை அளிக்க மிஷனரிமார் எடுத்த முயற்சிகளுக்கு அங்குள்ள இந்துக்கள் பொதுவாகச் சாதகமான முறையிலே நடந்து கொண்டனர்.

ஆயினும் 1865 இல் நியமிக்கப்பட்ட சட்ட நிரூபண சபையின் தெரிவுக் குழு ஒன்று பரந்த அடிப்படையில் நாட்டின் கல்வி நிலையை ஆராய்ந்து சபைக்குத் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கக் கேட்கப்பட்டிருந்தது.

பரந்த மனப்பாங்கும் பௌத்த இந்துக் குழந்தையின் வளர்ச்சிக்கு உகந்த வகையில் கல்வி இருத்தல் வேண்டும் என்ற எண்ணமும் தெரிவுக் குழுவினருக்குத் தெரிந்திருந்தது போல் தோன்றுகின்றது.

இக்குழுவின் சிபாரிசுக்கிணங்க சிங்கள, தமிழ்க் கல்விக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

மதச்சார்பற்ற சிறந்த கல்வியை வழங்கும் பாடசாலைகளுக்கு நன்கொடை அளிக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டு இதன் வழி மிஷனரிமாரின் கட்டுப்பாட்டிலிருந்து பாடசாலைகளை சுவீகரிக்கும் வகையில் பொதுக் கல்வித் திணைக்களம் ஒன்று நிறுவப்பட்டது.

அரச உதவித் திட்டத்துடன் கூடிய அரசின் இந்தத் தீர்மானம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான சுயமொழிப் பாடசாலைகளின் உருவாக்கத்திற்கு காரணமாயிற்று.

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் பிரதானமாக சிங்கள, தமிழ்ப் பாடசாலைகளுக்கு நன்கொடை வழங்கப்பட்டதால் பாடசாலைகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் துரிதமாகவும் அதிகரித்தன. ஆங்கிலமொழிப் பாடசாலைகள் அவற்றுக்கான ஆளணியைக் கொண்டிருந்த மிஷனரி நிர்வாகத்தில் விடப்பட்டன.

1870 இல் ஆரம்பிக்கப்பட்ட தனியார் கொடுப்பனவு முறைமை தனியார் துறை முகவர் மீண்டும் தமது கல்வி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு உந்துசக்தியாக அமைந்தது. அவற்றின் வளர்ச்சி வீதம் அரசாங்கப் பாடசாலைகளை விட அதிகமாக இருந்தது.

1870 இல் 156 பாடசாலைகளையும் 8726 மாணவர்களையும் நிர்வகித்த அரசாங்கம் 1875 இல் 276 பாடசாலைகளையும் 12776 மாணவர்களையும் கொண்டிருந்தது.

அரசாங்கம் அதன் நன்கொடை உதவித் திட்டத்தில் முதல் ஐந்து வருடங்களுள் 120 பாடசாலைகளையும் 4050 மாணவர்களையும் அதிகமாகக் கொண்டிருந்தது.

மறுபுறத்தில் தனியார் துறையினர் 1875 இல் 657 பாடசாலைகளையும் 41343 மாணவர்களையும் கொண்டிருந்து பின் 425 பாடசாலைகளையும் 33142 மாணவர்களையும் அதிகமாகக் கொண்டிருந்தனர்.

1879 இல் நன்கொடை உதவித் திட்டத்தின்கீழ் 75064 பிள்ளைகளின் தேவையைக் கவனிக்கும் 814 அரசாங்கப் பாடசாலைகள் இருந்தன. இந்த 1186 பாடசாலைகளும் இலங்கை முழுவதும் பரந்து காணப்பட்டன.

இவற்றில் வடமாகாணத்தில் 288 பாடசாலைகள் சனத்தொகையின் பதினான்கில் ஒரு பகுதிக்கும் கிழக்கு மாகாணத்தில் 93 பாடசாலைகள் சனத்தொகையின் இருபதில் ஒரு பகுதிக்கும் கல்வியளித்தன.

1894 அளவில் இவ் எண்ணிக்கை நன்கொடை பெறும் 308 பாடசாலைகளாலும் நன்கொடை உதவிபெறாத 126 பாட்சாலைகளாலும் என அதிகரித்து மொத்தம் 23241 மாணவர்களைக் கொண்ட 434 பாடசாலைகளாக அதிகரித்தது. இத்துரித அதிகரிப்பிலான பாடசாலைகளின் எண்ணிக்கைப் பரம்பல் பின்னரும் தொடர்ந்தது.

(தொடரும்)

# 25 நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள 25 நகரங்கள் இரண்டாம் நிலை நகரங்களாக அபிவிருத்திச் செய்யப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாவட்டத்துக்கொரு நகரம் என்ற அடிப்படையில் மூன்றாண்டு காலத்துக்குள் சகல வசதிகளையும் கொண்டதாக குறித்த நகரங்கள் அபிவிருத்திச் செய்யப் படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் நிலை நகர அபிவிருத்திக்கென, ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை, இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மது அருந்துவதற்காக

# பிறந்து ஐந்து நாட்களேயான குழந்தையை விற்ற தந்தை

(டிக்வெல்ல)

மது அருந்துவதற்கு பணம் இல்லாமையால் பிறந்து ஐந்து நாட்களேயான குழந்தையை விற்ற தந்தையின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டிக்வெல்லையில் தந்தை ஒருவர் மது அருந்துவதற்கு பணம் இல்லாததால்பிறந்து ஐந்து நாட்களேயான தனது குழந்தையை தாயிடமிருந்து பிரித்துச் சென்று பெண் ஒருவருக்கு சுமார் ஆயிரம் ரூபாவுக்கு விற்றுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக டிக்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டிக்வெல்ல பகுதியை சேர்ந்த விக்கிரமசிங்க என்ற நபருக்கு நான்கு குழந்தைகள் உள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து சந்தேகநபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு, 2 இலட்சம் ரூபா சரீரப் பிணை வழங்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து குறித்த சந்தேகநபரை நாளை 30 ஆம் திகதி நீதிமன்றில் மீண்டும் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மருத்துவபீட மாணவர்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்-ஹிருணிகா



(கொழும்பு)

மருந்து மாபியாவை கட்டுப்படுத்தியது போல் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் என்பவற்றையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவர்களின் நடவடிக்கையால் அதிகமான மாணவிகள் வைத்திய பயிற்சியை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றனர் என ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனியார் வைத்திய துறையில் பட்டம் பெற்ற பல மாணவிகள் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்ய முடியாமல் நிர்க்கதியான நிலையில் இருக்கின்றனர். சைட்டம் கல்லூரியில் பட்டம் பெற்ற காரணத்தினாலே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவர்களை பதிவு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

அத்துடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியும் ஆதரவளித்து வருகின்றார். இந்த மாணவர்களை பதிவு செய்யுமாறு உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தீர்ப்பு வந்த பின்னர் இவர்கள் ஜனாதிபதியை சந்தித்து, இந்த மாணவர்கள் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்ற பின்னர் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர்.

அத்துடன் உயர்தரத்தில் எனது பெறுபேறுகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் சட்டக் கல்லூரியில் எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

அதனால் வெளிநாட்டு பல்கலைக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றேன். அதனால் எமது பணம் வெளிநாட்டுக்கு சென்றது. ஆனால் இந்த மாணவர்கள் எமது நாட்டிலே படித்து பட்டம் பெற்றுள்ளனர். அதனால் எமது அந்நியச்செலாவணி பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இந்த மாணவர்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாடசாலை சுற்றுநிருபத்தில் மாற்றம்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில், புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடுவதற்கு, அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கின்றபோது, பெற்றோர் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கவனத்தில் கொண்டே, மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1682


## தினேஷ்

துன்பம் வரும் சமயத்தில் அதைக் கண்டு சிரிக்கப் பழகுங்கள்... அதுவே அத்துன்பத்தை வெட்டும் வாளாகி விடும்



## மதன்

பேசி முடிவுக்கு வரலாம் என்பவர்களிடம் பேசுவது எளிது... ஆனால் இது தான் பேசனும் என்று முடிவெடுத்து விட்டு பேசுபவர்களிடம் பேசுவது கடினம்



## திலக்





## ரேஷ்மா

முன்பின் தெரியாதவர்கள் கூட முதுகில் குத்துவதில்லை... முகமறிந்த உறவுகள்தான் அதிகம் குத்துகிறார்கள்



## கிருத்திகா

வெளியே தெரிவது எல்லாம் வெற்றியல்ல



## வர்சா

பிரியாணி அரிசியை விதைத்துவிட்டு பழைய சோறு சாப்பிடும் விவசாயிகளே நம் தெய்வங்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

16

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவுக்குரிய சட்ட அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சட்டங்கள் பின் வருவனவாகும்

1. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டம்.

2. 1975 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்

3. 1981 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்

4. 1981 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

5. 1986 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

6. 1986 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.

16. காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் -1979 இல 43 **(Land Grants (Special Provisions) Act)**

இது காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு' உடைமையாக்கப்பட்ட விவசாய மற்றும் தோட்டக்காணிகளை அரசுடைமையாக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட காணிகளை எதுவித கட்டணமுமின்றி காணியற்றவர்களுக்கு மாற்றியளிக்கக் கூடியதாகவும், இது தொடர்பான இடைநேர் விளைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.அரசுக்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் காணியின் ஒரு பங்கினை ஆதன வளிப்புப்பத்திரம் ஒன்றின் மூலம் 18 வயதிற்கு மேற்பட்ட எந்தவோர் இலங்கைப் பிரஜைக்கும் எதுவித கட்டணமும் அறவிடப்படாமல் ஜனாதிபதியால் மாற்றியளிக்கப்பட முடியும். இப்பிரிவின் கீழ் அரசின் எந்தவொரு காணியும் ஒப்படைக்கப்படும்போது கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்தல் வேண்டும்.

➢ உத்தேசப்பெறுநர் சொந்தக்காணி எதுவுமற்றவராக இருத்தல்

➢ உத்தேசப்பெறுநரின் குடும்ப வருமான மட்டம்

➢ குறித்த காணியை விருத்திசெய்வதற்கு உத்தேச பெறுநருக்குள்ள ஆற்றல்

அரசின் எந்தவொரு காணியையும், அக்காணி, காணி ஆணையாளர் திருப்தியுறும் வண்ணம் அளக்கப்பட்டு எல்லைகள் குறிக்கப்பட்ட பின்னாலன்றி மாற்றியளிக்கப்படல் கூடாது.

1979 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 80000 ஆகும். காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள கொள்கை அளவிலான தீர்மானத்துக்கு அமைய 3 வருடகாலமாக இச்சட்டத்தின் கீழ் காணி விடுவிக்கப்படுவதில்லை. காணியற்ற குடும்பங்களுக்கு காணிகள் வழங்குவதற்காக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான உற்பத்தித்திறன் அற்ற காணிகளை அடையாளப்படுத்தும் போது காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்கி கிராம விரிவாக்கல் நோக்கத்திற்காக மட்டுமே எடுக்கப்படவேண்டும் என காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதனால் காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் புதிய காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதுடன் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்த காணிகள் தொடர்பாக மட்டுமே தொடர் நடவடிக்கைகள் முடிவு பெறும் வரை எடுக்கப்பட்டு வருகின்றன.

17. அரசகாணி (உடைமை மீளப்பெறல்) சட்டம் - 1979இல் இல 07 (சட்டத் திருத்தம் 1981ல் இல.58, 1983இல் இல.29, 1987இல் இல.50, 1992இல் இல.45, 1993இல் இல.60, 1997இல் இல.29, 1998இல் இல.53, 2005இல் இல.3) - **State Lands (Recovery of Possession) Act No. 7 of 1979.**

இது அனுமதியின்றி அரசகாணிகளில் உடைமை கொண்ட அல்லது குடியிருப்போரிடமிருந்து அவற்றின் உடைமையை மீளப்பெறுவதற்காகவும், அத்துடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் உருவாக்கப்பட்ட சட்டமாகும்.

பிரதேசச் செயலாளர்கள், சகல கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அதிகார சபைகள் என்பவற்றுக்குரிய காணிகள் என்பன அரச காணிகளாக கருதப்படும். அந் நிறுவனங்களின் தகுதிவாய்ந்த அதிகாரி (உதாரணம்:-பொது முகாமைகாளர் புகையிர திணைக்களம், ஆணையாளர் உள்ளூராட்சி சபைகள், ஆணையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை) தனது நிறுவனத்திற்குரிய காணியில் ஒருவர் அனுமதியின்றி அதனை உடைமையாகக் கொண்டு இருப்பாராயின் அவ் உடைமையை மீளப்பெறுவதற்காக குற்றவியல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நீதிமன்றம் அக்காணியில் அனுமதியின்றி குடியிருப்பவருக்கு அழைப்பாணைவிடும். அனுமதியின்றி குடியிருப்பவர் அவ் உடைமையை வைத்திருப்பதற்கு அனுமதிப்பத்திம் அல்லது வேறு சான்றிதழைக்காட்டி தனது உரிமையை நிரூபிக்க வேண்டுமே ஒழிய வேறு காரணங்கள் கூறமுடியாது.

18. நிந்தகம் காணிச்சட்டம் -1968இல் இல.30 **( Nindagama Lands Act: No. 30 of 1968)**

உரிமையாளர்களால் நிந்தகம் காணிகளுக்குரிய வாடகையாளர்களதும், குத்தகைக்கெடுத்தவர்களதும் சேவைகளை நீக்கவும், அத்தகைய வாடகை மற்றும் குத்தகைக்காரர்களை அத்தகைய காணிகளின் முற்றுரிமைச் சொந்தக்காரர்களாக்கவும் அத்தகு உரிமைகளைப் பதிவு செய்யவும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டமாகும்.

19. நிலஅளவைச்சட்டம் - 2002 இல் இல.17

இது நில அளவையாளர் நாயகத்தின் தத்துவங்களுக்கும், பணிகளுக்கும், நில அளவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நில அளவையாளர்களின் உயர் தொழில் சார் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்காக நில அளவைச் சபையொன்றைத் தாபிப்பதற்கும், காணி அளவைக் கட்டளைச் சட்டத்தையும், நில அளவையாளர் கட்டளைச் சட்டத்தையும் நீக்குவதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டமாகும்.

நில அளவையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிறிதொருவரால் காணி உறுதியைச் சமர்ப்பிக்குமாறு கோர முடியுமென்பது பதின்னாலாம் பிரிவின் கீழ் கோரப்படும் உறுதி, ஆவணம் அல்லது சாதனம், அத்தகைய உறுதி ஆவணம் அல்லது சாதனம் எந்த வளவுகள் தொடர்பானதோ அந்த வளவிலேயே அல்லது அதைக் கோருகின்ற ஆள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் 14ஆம் பிரிவின் கீழ் அதைச் சமர்ப்பிக்குமாறு கோருவதற்கான தத்துவமானது, நில அளவையொன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகையவாறு பரிசோதனை செய்வதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குகின்றதெனக் கருதப்படல் வேண்டும். அத்தகைய ஏதேனும் உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை அத்தகையவாறு பரிசோதனை செய்வதற்கு காரணமெதுவும் இல்லாமல் 14ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆளெவருக்கும் மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைச் செய்தவர் ஆவர்.

➢ **நில அளவையாளர் நாயகத்தால் ஒப்பமிடப்பட்ட சில வரைபடங்களைக் காண்பித்தல்.**

இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டதும் நில அளவையாளர் நாயகத்தால் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலரினால் ஒப்பமிடப்பட்டதெனக் கொள்ளப்படுகின்றதும் நிலவுரித்து சார் நிலப்படம், வரைபடம் அல்லது வேறு ஏதேனும் வரைபடம் அல்லது நிலப்படம் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அது அதன்கண் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு முதற்றோற்ற எண்பிப்பாக எடுத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும். அத்துடன் அது உண்மையில் நில அளவையாளர் நாயகத்தால் அல்லது அவர் சார்பில் செயலாற்றுகின்ற அலுவலர் ஒருவரினால் ஒப்படைக்கப்பட்டதென அல்லது அது அவரின் அதிகாரத்துடன் தயாரிக்கப்பட்டதென அல்லது செம்மையானதென எண்பிப்பது, அதற்கு முரணான சான்று முதலில் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அவசியமானதாகாது.

நில அளவைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நில அளவைச் சபை 2003 இல் நிறுவப்பட்டது. இந் நில அளவைச் சபை நில அளவையாளர்களைப் பதிவு செய்தல், பதிவுசெய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், பதிவுசெய்யப்பட்ட நில அளவையாளர்களிடத்தில் தொழில்சார் நிபுணத்துவத்தைப் பேணிச் செல்லல், பதிவுசெய்யப்பட்ட நில அளவையாளர்கள் தவறுகள் செய்யின் அதற்கெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் முதலான நோக்கங்களைப் பிரதானமாகக் கொண்டு இயங்குகின்றது. ஒருவருடைய காணியை அளக்கும்போது காணியை அளக்கும் நில அளவையாளர் தவறுகள் இழைத்து விட்டார் எனக்கருதினால் நில அளவைச் சபை மூலம் சில விமோசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான சில தகவல்களை நில அளவைச் சபையின் இணையத்தளத்தை பார்வையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

20. காணிஉரித்துப் பதிவுச் சட்டம் (1998இல் இல.21)

காணித்துண்டொன்று தொடர்பில் ஆய்வு செய்யவும், பதிவு செய்யவும், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்தவும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமாகும்.

➢ **கடத்திரள் வரைபடங்கள் தயாரித்தல்**

காணிஉரித்துப் பதிவுச்சட்டத்தின் 1ஆம் பிரிவின் கீழ் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பின் அக் கட்டளையில் குறித்த பிரதேசத்துக்கான கடத்திரள் வரைபடத்தைத் தயாரிக்குமாறு உரித்து நிர்ணய ஆணையாளரால் நில அளவையாளர் நாயகத்தை வேண்டிக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு கோரப்பட்டதும் நில அளவையாளர் நாயகத்தால் அக் கடத்திரள் வரைபடம் தயாரிக்கப்படச் செய்தல் வேண்டும். அத்துடன் அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் காணி உரித்து நிர்ணய ஆணையாளருக்கு வழங்கப்படஆவன செய்தல் வேண்டும்.

காணிஉரித்துப் பதிவுச்சட்டம் பற்றி வலம்புரி பத்திரிகையில் வெளிவந்த எனது கட்டுரையில் விளக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கட்டுரையில் பொதுவான காணிச் சட்டங்கள் பற்றி அலசப்பட்டது. பகுதி 2 இல் விசேட தேவைகளுக்காக (உதாரணம்- மகாவலி அதிகாரசபைச் சட்டம்) உருவாக்கப்பட்ட சட்டங்கள் பற்றி அலச எண்ணியுள்ளேன். காணிசம்பந்தமான எனது கட்டுரையைப் பார்த்து தொலைபேசி மூலம் யாழ் மக்கள் என்னுடன் தொடர்பு கொள்கிறார்கள். எனது அறிவுக்கு எட்டிய வரையில் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். எந்தப் பிரச்சினைக்கும் கடைசித் தீர்வு நீதிமன்றத்தை நாடுவதுதான். பொதுவான காணிப்பிரச்சினைகள் பற்றி அடுத்த கட்டுரையில் ஓரளவு அலசப்படும்.

**(முற்றும்)**




# பூனையிடம் கதை கேட்ட எலிகள்



அழுதபடியே வந்தது மியா பூனைக்குட்டி. மிக அழகாக இருக்கும். அது அழுவதைப் பார்த்தால் உங்களுக்கும் அழுகை வந்துவிடும்.

பாட்டி பூனை, "ஏன் அழறே? கீழ விழுந்திட்டியா?" என்று கேட்டது.

"இல்லை" என்று அழுதபடியே தலை ஆட்டியது மியா.

"யாராவது அடிச்சாங்களா?"

"இல்லை" என்று தலை ஆட்டியது.

"அப்புறம் என்ன ஆச்சு? நீ அழுவதற்குக் காரணம் தெரிந்தால் தானே நான் உனக்கு உதவ முடியும்?" என்று மியாவை அணைத்துக்கொண்டது பாட்டி பூனை.

"நான் எலி வேட்டைக்குப் போனேனா..."

"ம்..."

"நிறைய எலிகளைப் பார்த்தேனா..."

"ம்..."

"ஆனா, என்னால ஒரு எலியைக்கூடப் பிடிக்க முடியலை" என்று சொல்லி வருத்தப்பட்டது மியா.

"உன்னால ஏன் எலியைப் பிடிக்க முடியலை?"

"எலிங்க என்னைவிட வேகமாக ஓடி, சின்னப் பொந்தில நுழைஞ்சிடுதுங்க".

"சரி. அதுக்காக யாராவதுஅழுவாங்களா? இல்ல... அழுதால் மட்டும் எலி கிடைச்சுடுமா?" என்று மியாவின் முதுகைத் தடவிக் கொடுத்தது பாட்டி பூனை.

"நான் எலிகளை வேட்டையாடணும்"

'மியா, அழாதே. நம் வீட்டுக்கே எலிகள் வரும்படி செய்கிறேன்" என்றது பாட்டி பூனை.

"பாட்டி, அந்த எலிகளை நம்ம வீட்டுக்கு வரவழைக்க முடியுமா?" என்று உற்சாகமாகக் கேட்டது மியா.

"முயற்சி பண்றேன்"

பாட்டியின் நம்பிக்கை மியாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

அன்று மாலையே மியா வீட்டு வாசலில், இங்கு எலிகளுக்கு நல்லொழுக்கக் கதைகள் கூறப்படும். கேட்கலாம்... விளையாடலாம்... வாருங்கள் என்ற அறிவிப்புப் பலகை தொங்கியது.

பெரும்பாலான எலிகள் படித்துவிட்டுப் பயந்தன. ஒரு சில எலிகள் பயந்து பயந்து தங்களது எலிக்குஞ்சுகளை அழைத்து வந்தன.

எலிகளைக் கண்டதும் பாட்டி பூனை, "பயப்படாம வாங்க. உங்க குழந்தைகளுக்கு நன்னெறிக் கதைகள், நல்லொழுக்கக் கதைகள், சுற்றுச்சூழல் கதைகள், அறிவியல் கதைகள் எல்லாம்சொல்லப் போறேன். அதோடு உற்சாகமான விளையாட்டுகளையும்சொல்லித் தருவேன்" என்று அன்பாக அழைத்தது.

பூனையின் பேச்சில் நம்பிக்கை ஏற்பட்ட எலிகள், தைரியமாகத் தங்களது எலிக்குஞ்சுகளைக் கதை கேட்க விட்டுவிட்டுச் சென்றன.

அன்று மூன்று எலிக்குஞ்சுகள்தான் வந்திருந்தன. அவற்றுக்குப் பாட்டி பூனை அழகான கதை ஒன்று சொன்னது. அந்தக் கதை எலிக்குஞ்சுகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. கொஞ்சம் விளையாட்டு, ஒரு பாட்டு என அந்த ஒரு மணிநேரம் சென்றதே தெரியவில்லை. மகிழ்ச்சியோடு எலிகள் தங்களின் வீட்டுக்குச் சென்றன.

மியா உள் அறையில் இருந்து கவனித்துக்கொண்டிருந்தது.

"மியா... மியா..."

"என்ன பாட்டி?"

"இன்று வந்த எலிக்குஞ்சுகளைப் பார்த்திட்டியா? இன்னும் இரண்டு நாள் கழிச்சு வேட்டையாடிடு. உடனே வேட்டையைத் தொடங்கினால் மீதி எலிகள் வராமல் போய்விடும்" என்றது பாட்டி பூனை.

மியா மகிழ்ச்சியாகத் தலை ஆட்டியது.

எலிகள் தங்களது நண்பர்களையும் அழைத்து வந்தன. இப்போது பூனையின் வீட்டில் எலிகள் அதிகம் இருந்தன. இத்தனை நாளும் எலிக்குஞ்சுகளுக்குப் பாட்டி சொன்ன நன்னெறிக் கதைகளையும் நல்லொழுக்கக் கதைகளையும் உள் அறையில் இருந்து கேட்ட மியாவுக்கு அருகில் இருந்து கேட்க ஆசை வந்தது. அதுவும் எலிகளோடு சேர்ந்து கதை கேட்டது, விளையாடியது.

ஒரு வாரம் சென்றது.

"மியா, இன்றைக்கும் கதை கேட்க எலிகள் வரும். நான் கதை சொல்லி முடித்தவுடன் நீ வேட்டையை ஆரம்பித்துவிடு" என்றது பாட்டி பூனை.

தலையை ஆட்டியது மியா.

மாலை எலிகள் கதை கேட்க வந்தன.

"நம்மை நம்பி வந்தவர்களை ஒருபோதும் ஏமாற்றக் கூடாது" என்ற அழகான கருத்தைச் சொன்னது அன்றைய கதை. விளையாட்டு ஆரம்பமானது. பாட்டி பூனை கதவைத் தாழிட்டது.

"மியா, இது உன்னோட நேரம். நீ எலிகளை வேட்டையாடலாம். நான் கதவையும் ஜன்னல்களையும் மூடிவிட்டேன்" என்று சத்தமாகச் சொன்னது பாட்டி பூனை.

பாட்டியின் பேச்சைக் கேட்ட எலிகள் நடுங்கின.

"ம்.. மியா ஆரம்பமாகட்டும் உன் வேட்டை" என்றது பாட்டி பூனை.

"பாட்டி, என்னை மன்னிச்சிடு. நீ சொன்ன கதைகளால் என் மனதை மாற்றிக்கொண்டேன். இன்று நீ சொன்ன கதையில் நம்மை நம்பி வந்தவர்களை ஒருபோதும் ஏமாற்றக் கூடாது என்ற பொருள் இருந்தது. அதன்படி பார்த்தால் இந்த எலிகள் நம்மை நம்பி இங்கு பயமில்லாமல் வருகின்றன. நானும் அவர்களுக்கு நல்ல நண்பனாகி விட்டேன். என் நண்பர்களை என்னால் வேட்டையாட முடியாது" என்றது மியா.

அப்போதுதான் எலிகளுக்குப் பயம் குறைந்தது.

மியாவின் பேச்சால் அதிர்ச்சியடைந்த பாட்டி பூனை சற்று யோசித்துவிட்டு, "மியா, நீ வயசில சின்னவனா இருந்தாலும் நான் சொன்ன கதைகளை உன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுத் திருந்திட்டே. ஆனால், கதைகளைச் சொன்ன நான் திருந்தாமல் இருந்திட்டேன். அது மிகப் பெரிய தவறுதான். எல்லோரும் என்னை மன்னிச்சிடுங்க.

இன்று முதல் மியாவைப்போல நீங்களும் எனக்குப் பேரக் குழந்தைகள்தான்" என்றது பாட்டி பூனை.

இப்போது அதிக அளவில் பாட்டியிடம் கதைகளைக் கேட்க ஆர்வமாக வந்துகொண்டிருக்கின்றன எலிகள்.

# விடுகதைகள்

• வட்டமான அறையில் அண்ணன், தம்பி இரண்டு பேர். அவர்களைச் சுற்றிப் பன்னிரண்டு நண்பர்கள். அண்ணன், தம்பி இருவரும் நண்பர்களைத் தொட்டுத் தொட்டு விளையாடுவார்கள். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை அண்ணன், தம்பி இணைந்து ஒவ்வொரு நண்பர்களாகத் தொட்டுப் பிடிப்பார்கள். அது என்ன?

**கடிகாரம்**

• நின்றால் ஒரு பெயர். ஓடினால் ஒரு பெயர். விழுந்தால் ஒரு பெயர் அது என்ன?

**தண்ணீர்! நின்றால் குளம், ஓடினால் நதி, விழுந்தால் அருவி.**

# முயல் போல ஓடுவோம்

குட்டி முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது
பற்றை ஒன்றின் மறைவிலே
பதுங்கிக் குந்தி இருக்குது



எட்டி எட்டிப் பார்க்குது
என்னைக் கண்டதும் ஓடுது
பள்ளம் திட்டி பாராமலே
பாய்ந்து பாய்ந்து ஓடுது

ஓடும் முயலைப் போலவே
உள்ளம் உறுதி கொள்ளுவோம்
நாமும் துள்ளி ஓடுவோம்
நன்றாய் ஓடப் பழகுவோம்.

மனிதரின் செயல்கள் அவர்கள் சிந்தனைகளுக்குச் சிறந்த விளக்கங்கள் ஆகும்.

- ஜோன் லாக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இஞ்சார்றா

கிராமிய வழக்கில் பேசப்பட்டு வந்த ***இஞ்சார்றா*** என்ற சொற்பதம் இப்போது உலகம் முழுவதிலும் பேசுபடு சொல்லாகியுள்ளது.

இதற்குக் காரணம் ***விசுவாசம்*** என்ற திரைப்படத்தில் நடிகர் அஜித் இஞ்சார்றா என்ற சொல்லை அடிக்கடி உச்சரிப்பார்.

இவ்வாறு விசுவாசம் படத்தில் அஜித் அடிக்கடி உச்சரிப்பதால், இஞ்சரா்றா என்ற சொல் இப்போது இமயத்து உச்சிக்கு ஏறிவிட்டது.

இதுபோல திரைப்படங்களிலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளிலும் வருகின்ற சில சொற்கள் மக்கள் மத்தியில் விரும்பிப் பேசப்படுவதாகவும் சுவாரஸ்யம் மிக்கதாகவும் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

உதாரணத்துக்கு ***என்னம்மா இப்படி பண்ணுறிங்களே*** என்பதும் **வரும் ஆனா வராது** என்பதும் பொதுமக்களால் அதிகமாகப் பிரயோகிக்கப்பட்ட சொற்கூட்டு எனலாம்.

இவை மக்கள் சமூகத்தில் திரைப்படங்களும் தொலைக்காட்சி நிகழ்சிகளும் செலுத்துகின்ற தாக்கத்தின் விரிபரப்பை எடுத்துக் கூறுவதற்கானது.

இப்போது இவ்விடத்தில் இஞ்சார்றா என்ற சொற்பதம் எதற்கானது என்று நீங்கள் கேட்டால்,

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இணை அனுசரணைக்கு இலங்கை அரசு உடன்பட்ட விடயம் தனக்குத் தெரியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இதுதவிர, ஜெனிவாத் தீர்மானத்தை தான் நிறைவேற்றப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன பங்குபற்றியதுடன் இணை அனுசரணைக்கு இலங்கை உடன்படுவதாக ஒத்துக்கொண்ட வகையிலேயே வாக்கெடுப்பின்றி இலங்கை அரசுக்கு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், இணை அனுசரணைக்கு இலங்கை ஒத்துக்கொண்டது தனக்குத் தெரியாதென்றும் ஜெனிவாத் தீர்மானத்தைத் தான் நிறைவேற்றப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதி கூறியதை நடிகர் அஜித்திடம் கூறினால் அதைக் கேட்கும் அவர் ***இஞ்சார்றா*** என்று அழகுபடச் சொல்லுவார்.

நாமும் அதன்படி இஞ்சார்றா என்று சொல்வதற்கு விருப்பமாயினும் ஜனாதிபதி சொல்வதுதான் நடக்கப் போகிறது என்பதால் இஞ்சார்றா என்று நம்மால் சொல்ல முடியவில்லை.

மாறாக தலைகுனிந்து எங்களுக்கு எப்போதுதான் விடிவு கிடைக்குமோ என்று நொந்து கொள்வதைவிட வேறுவழியேது.

# கஞ்சாவை நுகர முற்பட்ட 10 பேருக்கு சிறைத் தண்டனை

## யாழ்.நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கஞ்சாபோதைப்பொருளை நுகர்வதற்காக தமது உடைமையில் வைத்திருந்த 10 பேருக்கு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் தீர்ப்பளித்தார்.

ஒரு கிராமுக்கும் குறைவான கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த 9 பேரின் தண்டனைக் காலம் 5 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டதுடன், ஒரு கிராமுக்கு அதிகமான அளவில் கஞ்சாவை வைத்திருந்த ஒருவரின் தண்டனைக் காலத்தை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்து நீதிமன்று கட்டளையிட்டது.

அத்துடன், குற்றவாளிகள் 10 பேரும் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப் பணம் செலுத்தவும் மன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கஞ்சா போதைப்பொருளை நுகர்வதற்கு தயாராக வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை 7 பேரும் செவ்வாய்க்கிழமை 3 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் செவ்வாய் மற்றும் புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர. அதனால் அவர்களை எச்சரித்த நீதிமன்று, தண்டனைத் தீர்ப்பை வழங்கியது. (ம-3)

# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்

## கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் கூடிய விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தலை வெகு விரைவில் நடத்த வேண்டும்.

மாகாண சபைக்கான உறுப்பினர்கள், மாகாண அரசாங்கம், மாகாண அமைச்சரவை, முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அனைவரும் ஜனநாயக ரீதியில் மக்களால் நியமிக்கப்பட வேண்டும். இன்றேல் அது ஜனநாயக ஆட்சியாக அமைய முடியாது.

மாகாண சபைக்கான உறுப்பினர்கள், மாகாண அரசாங்கம், மாகாண அமைச்சரவை, முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் ஆற்றக்கூடிய கடமைகளை ஆளுநர்களால் நிறைவேற்ற முடியாது. எனவே, மாகாண சபைத்தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில செட்டியார்கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம், கள்ளியடி, தேத்தாவடி, அந்தோனிபுரம், இலுப்பைக்கடவை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# உர வகைகளை பயிர்களுக்கு வழங்க அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெல்லுக்கு மானிய விலையில் வழங்கும் யூரியா, TSP மற்றும் MOP ஆகிய உர வகைகள் மீதமாக இருந்தால் அதனை ஏனைய பயிர்களுக்கு வழங்குவதற்கு கமத்தொழில் அமைச்சு அனுமதியளித்துள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள 15 கமநல சேவை நிலையங்களில்மூன்று வகை உரங்களும் போதியளவு கையிருப்பில் உள்ளது என்பதையும் தேவைப்படும் உர வகைகளை 50 கிலோ கிராம் பை ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகள் தங்களுககுரிய கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென் யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (5)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

ஏழையையும் தனவந்தனையும் ஒன்றாகக் காண வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் இகழையும் புகழையும் ஏற்றத்தைய்ும் தாழ்வையும் போக்கையும் வரவையும் வந்தனையையும் நிந்தனையையும் ஒன்றாகக் காண்பதுவே காட்சி. பளிங்கு போல் தூய மனமுள்ளவர்க்கே இது அமையும்.

பூசையில் அமர்ந்தாலும் சில சமயம் மனக்குரங்கு தாவிக்குதித்து எங்காவது ஓடும். அதன் தலையில் குட்டி மந்திரமாகிய சங்கிலியால் பிணைத்து உறுதி என்னும் தூணிலே கட்டிப்போடவேண்டும். பிறது அதுவே நன்மனமாகி நமக்கு இனிமையைச் செய்யும்.

பசி, தாகம், வெயில், மழை இவற்றின் கொடுமைகளை பொறுத்துத் தவம் செய்பவர்கள் அருளைப் பெறுகிறார்கள். இரவு பகலாக ஓடி உழைத்துத் துன்புற்று விவசாயமும் வியாபாரமும் செய்பவர்கள் பொருளைப் பெறுகின்றார்கள். துன்புற்றாலன்றி அருளும் பொருளும் எய்தமாட்டா. (தொடரும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஓய்வும் செயலும்

ஓய்வும் செயலும் வாழ்வின் மிக இன்றியமையாத இரு நிலைகள். இவை இரண்டிலும் சமநிலையைக் காண்பதே ஒரு திறமையாகும். எப்போது எதைப் பெறவேண்டும, எவவளவு பெறவேணடும எனபது வவேகம. செயலில் ஓய்வையும் ஓய்வில் செயலையும் ஒன்றில் மற்றொன்றைப் பெறுவதுதான் முடிவான சுதந்திரம்.

வேலை செயவதைவடக கடினமான உழைபபு என்னும் நினைவே அதிகக் களைப்பைத் தருகிறது. கடுமையாக உழைத்துவிட்டேன் என்னும் நினைப்பு உனது நிம்மதியான ஓய்வில் குறுக்கிடுகின்றது. ஓய்வின் தரத்தைக் குறைக்கிறது. சிலர் பயனே இல்லாமல் உழைப்பதில் பெருமை கொள்வர்.

மற்றவர்கள் நான் தான் செய்பவன் என்ற எண்ணமற்ற நிலையில்தான் ஓய்வு இருக்கிறது என்பதை அறியாமல நணட ஓயவுககாக ஏஙகுவா. குறைநத அளவினதாக இருநதாலும தரமான ஓயவே வேலையின களைபபைத் தீர்த்துப் புத்துணர்வு தருகிறது.

உனக்கு ஓய்வு தேவைப்படும் போது உனது உடல் தானாகவே அதை எடுத்துக்கொள்ளும். ஓய்வு தேவை என்று நினைக்காமல் ஓய்வெடுப்பது முழுமையான ஓய்வைத் தருகிறது. ஆசையற்ற நிலை, பறறற்ற நிலை, சமாதி நிலை மிகமிக ஆழ்ந்த நிம்மதியான ஓய்வு ஆகும். (தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நினைத்தது நடக்க, வாழ்வில் வெற்றிபெற வேண்டுமா?

**புத்திர பாக்கியம் பெற** - சந்தானலெட்சுமியும், சந்தான கிருஷ்ணனையும் வணங்க வேண்டும்.

**தொழில் சிறந்து லாபம் பெற** - திருபபதி வெங்கடாசலபதியை வணங்க வேண்டும்.

**புதிய தொழில் துவங்க** - ஸ்ரீகஜலட்சுமியை வணஙக வேணடும.

**விவசாயம் தழைக்க** - ஸ்ரீதான்யலட்சுமி வணங்க வேண்டும்.

**சாப்பாட்டு கஷ்டம் நீங்க** - ஸ்ரீஅன்னபூரணியை வணஙக வேணடும.

**வழக்குகளில் வெற்றி பெற** - விநாயகரை வணங்க வேண்டும்.

**சனி தோஷம் நீங்க** - ஸ்ரீ ஐய்யப்பன், ஸ்ரீ ஆஞ்சநேயர் வணங்க வேண்டும்.

**பகைவர் தொல்லை நீங்க** - திருச்செந்தூர் முருகன் சஷ்டி விரதம் இருக்க வேண்டும்.

**பில்லி சூனியம் செய்வினை அகல** - ஸ்ரீவீரமாகாளி, சககரததாழவார , ஸ்ரீநரசிமமரை வணங்க வேண்டும்.

**திருஷ்டி விலக**- முத்துமாரி அம்மனை வணங்க வேண்டும்.

**அழியா செல்வம் ஞானம் சக்தி பெற** - சிவஸ்துதி செய்ய வேண்டும்.

இவை அனைத்தையும் நம் முன்னோர்கள் அன்றிலிருந்தே பின்பற்றி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (முற்றும்)

# வடமாகாண ரீதியிலான தைக்வொண்டோ முல்லைத்தீவு மாவட்ட அணி சாதனை







வடமாகாண ரீதியான அனைத்து மாவட்டங்களுக்கிடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான தைக்வொண்டோ போட்டியில் ஆண்கள், பெண்கள் இரு பிரிவிலும் முல்லைத்தீவு மாவட்டம் மாகாண ரீதியாக முதல் இடத்தைப் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாகாண மட்ட ஆண், பெண் தைக்வொண்டோ போட்டியில் ஆண்கள் பிரிவில், முல்லைத்தீவு மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்று 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் பெற்றுக்கொண்டதுடன், மன் னார் மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் பெற்றுக் கொண்டு இரண்டாமிடத்தைப் பெற்றதுடன் 2 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கத்தைப் பெற்று மூன்றாமிடத்தை கிளிநொச்சி மாவட்டம் பெற்றுக்கொண்டது.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டம் தனதாக்கி 3 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் பெற்றுக் கொண்டதுடன் மன்னார் மாவட்டம் 2 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம் பெற்றுக் கொண்டது.

மூன்றாம் இடத்தினை வவுனியா மாவட்டம் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்தைப் பெற்று கொண்டது. (க-250)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் சவாரிப் போட்டி

கருகம்பனை மண்ணின் புத்தாண்டுக்கோலாகலம் வரும் ஞாயிறு முதல் கோலாகலமாக ஆரம்பம்.

சித்திரை வருடப்பிறப்பினை முன்னிட்டு கருகம்பனை தமிழ் மன்றம்,சனசமூக நிலைய இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் சவாரிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 31 ஆம் திகதி நண்பகல் ஒரு மணியளவில் கருகம்பனை சீராவலை சவாரித்திடலில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிகளில் நான்கு பிரிவுகளிலும் வெற்றிபெறும் காளைகளுக்கு முதல் பரிசாக தங்கப் பதக்கம் வழங்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் பாரம்பரிய விளையாட்டுடன் ஆரம்பமாகும் சித்திரை கொண்டாட்டம் தொடர்ந்து பல கலை கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெறுமென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கோல் மழையில் நனைந்தது மைதானம் வதிரி டயமன்ஸ் அணி இறுதியில்



யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.


இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம் கடந்த 25 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

கோல்களின் மழைக்கு நடுவில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதியில் வதிரி டயமன்ஸ் அணி, 07:05 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

வதிரி அணி சார்பாக நட்சத்திரவீரர் பிறேம்குமார் 3 கோல்களையும் நிதுஸன் 2 கோல்களையும் லக்கிஸன் மற்றும் உசாந்தன் தலா ஒரு கோலையும் அடித்தனர். (க-26)

# தொடக்கம் சரியாக அமைந்தது வெற்றி கையில் கிடைத்தது

## கார்த்திக் பெருமிதம்




பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் தொடக்கமே சிறப்பாக இருந்ததால் வெற்றி பெற்றதாக கொல்கத்தா அணித்தலைவர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார். கொல்கத்தாவின் ஈடன் கார்டனில் நடந்த ஐ.பி.எல்.போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ்-கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. முதலில் ஆடிய கொல்கத்தா அணி 4 விக்கெட் இழப்புக்கு 218 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் ஆடிய பஞ்சாப் அணி 4 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. இந்நிலையில் வெற்றி குறித்து கொல்கத்தா அணித்தலைவர் தினேஷ் கார்த்திக் கூறுகையில், 'இந்தப் போட்டியின் தொடக்கமே எங்களுக்கு சிறப்பாக இருந்தது. நிதிஷ் ரானாவின் ஆட்டம் மிகவும் அழகாக இருந்தது. இதேபோல உத்தப்பாவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இறுதியில் ரசல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். காயத்தில் இருந்து குணமடைந்த சுனில் நரேன் திரும்பி இருக்கிறார். அவர் எப்போதுமே சவாலாக இருந்தார்.

தோல்வி குறித்து பஞ்சாப் அணித்தலைவர் அஸ்வின் கூறுகையில், நோ போலினால் ஆட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாம். சிறிய தவறுகள் ஆட்டத்தை மாற்றி விடும்.

219 ஓட்டங்கள் எடுக்கக் கூடிய இலக்குதான். நாங்கள் செய்த தவறுகளால் தோல்வி ஏற்பட்டது. துடுப்பாட்டம் தான் ஆட்டத்துக்கு மிகவும் அவசியம்' என தெரிவித்துள்ளார். (க)

# கே.சி.சி.யின் கிரிக்கெட் போட்டிகள்

கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறும் இப்போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு காமாட்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி விளையாட்டுக் கழகமும் மதியம் ஒரு மணிக்கு நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.பி. விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மதியம் ஒரு மணிக்கு சென்ரல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

# நாங்கள் மணிவிழா கண்டவர்களில்லை வயதான அணி என்று கூறாதீர்கள்




சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்களை வயதானவர்கள் என்று விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என அந்த அணியின் வீரர் பிராவோ கூறியுள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் சென்னை அணி இதுவரை விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் சென்னை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் வயதானவர்கள் என்ற விமர்சனம் தொடர்ந்து சமூகவலைத்தளங்களில் வைக்கப்பட்டு வருகிறது. இது குறித்து பேசிய அந்த அணியின் 35 வயதான பிராவோ, கடந்தாண்டு சம்பியன் பட்டத்தை வென்று வயதுக்கும் திறமைக்கும் சம்பந்தமில்லை என்பதை நிரூபித்துக் காட்டினோம்.

எங்களைப் பொறுத்தவரை வயது வெறும் நம்பர் தான். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை பற்றி மக்கள் பேசும் போதெல்லாமல் வயது விவகாரத்தையும் இழுத்து விடுகிறார்கள். நாங்கள் ஒன்றும் 60 வயது நிரம்பிய அணி அல்ல. அணியில் 35, 32, 30 வயதுடைய வீரர்கள் தான் இருக்கிறார்கள். எங்கள் அணியினர் இன்னும் இளமையுடன்தான் இருக்கிறோம். உடலை கட்டுக்கோப்புடன் வைத்து, அனுபவத்தை பயன்படுத்தி விளையாடுகிறோம் எனக் கூறியுள்ளார். (க)

# கல்வி அமைச்சின் புதிய செயலாளராக

## நிஹால் ரணசிங்க நியமனம்



(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக நிஹால் ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

அனுபவமிக்க நிர்வாக சேவை அதிகாரியான நிஹால் ரணசிங்க, இதற்கு முன்னர் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## O/L பரீட்சை...

பாடங்களிலும் "ஏ" சித்திகளை பெற்றுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை கடந்த டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்து 661 பரீட்சை நிலையங்களில் இடம்பெற்றது.

அதில், 6 லட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தேசிய ரீதியாக முதலிடம் பிடித்த மாணவர்களின் விபரம் வருமாறு.

கொழும்பு விசாக பெண்கள் கல்லூரியின் மாணவி நிலக்னா வர்ஸ வித்தான முதலாவது இடத்தை பெற்றுள்ளார்.

விசாக பெண்கள் கல்லூரியின் மாணவி சஜித்தி ஹங்சதியும், கம்பஹா ரத்னாவலி பெண்கள் மகா வித்தியாலயத்தின் மாணவி சஞ்சானி திலேக்கா குமாரியும், மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தின் மாணவி மிந்தி ரெபேக்கா ஆகியோர் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளனர்.

ஐந்தாவது இடத்தை கேகாலை புனித ஜோசப் கல்லூரியின் மாணவி காயத்ரி ஹர்சிலா லிஹனி கடுவாரச்சி பெற்றுள்ளார்.

கொழும்பு தேவிபாலிகா மகா வித்தியாலயத்தின் மாணவி சந்தலி முத்துனிமா ரத்நாயகவும், கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவன் சஹான் யசங்க சமரகோனும்,

கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவன் கவிரு மெத்னுக்கனும், காலி மஹிந்த கல்லூரியின் மாணவன் சஸ்மித்த ஆகாஸ்வர லியனகேயும், ஹொரணை தக்சிலா கல்லூரியின் மாணவி ஹமாசி ஹெரந்திகாவும் ஆறாவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.

வெளியாகிய பெறுபேறுகளுக்கு அமைய முதல் பத்து இடங்களில் எந்தவொரு தமிழ் மாணவர்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## தேசியப் பிரச்...

வரவு செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று வியாழக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே சம்பந்தன் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம், நீடித்த தேசிய பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தரும் தருணத்தை திறந்துவிட்டிருந்தது.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வை வழங்குவதை அது உறுதிப்படுத்தியிருந்தது, அத்துடன் நாட்டின் இறைமை, எல்லைப் பாதுகாப்பு என்பனவற்றையும் அது உறுதிப்படுத்தியிருந்தது. மேலும் மத்திய அரசாங்கம் ஏனைய பகுதிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் வழிமுறைகளையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்த நாடு மக்களுக்கானது. மாகாண சபைகள் மக்களுக்கான பிரதிநிதித்துவ அரசியலைப் பாதுகாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டது. ஆனாலும் தீர்வுக்கான பயணம் முழுமை பெறவில்லை.

இந்த பாராளுமன்றம், புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் நோக்குடன், அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டது. இருந்தபோதிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் சில தடைகள் காணப்படுகின்றன.

தடைகளை நாம் அகற்ற வேண்டும். ஆகவே பாராளுமன்றத் தின் ஊடாக புதிய அரசியலமைப்பினைக் கொண்டுவந்து தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது மிகவும் அவசியமானது என்றார். (ம-3)

## முதல் 10 இடங்...

மாணவரும் இடம்பிடிக்கவில்லை.

அத்துடன், வடக்கு கிழக்கில் மாணவர்களின் சித்தி வீதமும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 ஆயிரத்து 495 பேர் பரீட்சைக்குத் தோற்றி 6 ஆயிரத்து 337 பேர் மட்டுமே உயர் தரத்தைத் தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 405 பரீட்சார்த்திகளில் ஆயிரத்து 434 மாணவர்கள் மட்டுமே உயர் தரத்தைத் தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 494 பரீட்சார்த்திகளில் ஆயிரத்து 246 பரீட்சார்த்திகள் மட்டுமே உயர்தரத்தைத் தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 638 பரீட்சார்த்திகளில் ஆயிரத்து 321 மாணவர்கள் மட்டுமே உயர் தரத்தை தொடர்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 143 பரீட்சார்த்திகளில் ஆயிரத்து 929 மாணவர்கள் மட்டுமே உயர்தரத்தை தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர். (ம-3,10)

## வறட்சி கார...

கடந்த 24 மணித்தியாலங்களில் அதிக வெப்பமான வானிலை குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், வடமேல் மாகாணத்திலும் மன்னார், கம்பஹா, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் இன்றைய தினம் வெப்பமான வானிலை நிலவக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அந்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் நாளாந்தம் 2,600 மெகாவோட் மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றது.

அதில் 30 சதவீதமான மின்சார உற்பத்தி நீர் மின் உற்பத்தி ஊடாக இடம்பெறுகிறது.

எனினும் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக நாளாந்தம் 2,260 மெகாவோட் மின்சார விநியோகத்தை மாத்திரமே வழங்க முடிவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அரச சேவை...

அவசரமுமானதாகும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 36ஆவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு நாட்டின் நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, கணக்காய்வு சேவை உள்ளிட்ட அரச சேவையின் உயர் துறைகள் முன்னணி வகிக்க வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார நிலைமைகளிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசியல்வாதிகளால் மட்டும் முடியாது என்றும் குறிப்பிட்டார்.

தற்போது 30 வீதமாகவுள்ள நாட்டின் அரச ஊழியர்களின் வினைத்திறனை குறைந்தது 50 வீதமாகவாவது அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அவ்வாறு இல்லாதபோது நாடு என்ற வகையில் முன்னோக்கி செல்லும் பயணத்தை வெற்றிகொள்ள முடியாதென்றும் குறிப்பிட்டார்.

அனைத்து துறைகளுக்கும் அவற்றின் கீர்த்தியையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், அனைத்து துறைகளினதும் தொழில்சார்ந்த கோரிக்கைகளை முடியுமானளவு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் ஒருபோதும் பின் நிற்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# வட மாகாண தொழில்நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்கள்

## யாழில் நேற்று கவனயீர்ப்பு பேரணி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்களால் நேற்று சுகவீன விடுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் பேரணியும் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஒன்றுதிரண்ட தொழில்நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்கள், தமது சேவைக்கான தனியான சேவைப் பிரமாணக் குறிப்பை அரசு நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று வலியுறுத்தி பேரணியாகச் சென்றனர். அவர்களது பேரணி யாழ்ப்பாண மாவட்ட செயலகம் வரை சென்றது.

பல நூற்றுக் கணக்கானவர்கள் பங்கேற்ற இந்தப் பேரணியில் நிர்வாகிகளே களக்கொடுப்பனவு மற்றும் பணிக்கொடுப்பனவை தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களுக்கு வழங்கவும், 6/2016 சுற்றறிக்கைக்கு அமைவாக தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களுக்கான படிகளை வழங்கவும், அதிகாரிகளே தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களின் பணியை உறுதிப்படுத்தவும், அபிவிருத்திகள் தடைப்படும் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களின் போராட்டம் ஆரம்பம் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ம-3)

## ஜனநாயகத்...

பாராளுமன்றத்தில் நேற்று குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க, அதிகாரங்களை பகிர்ந்து, தேர்தல் முறைமையை ஜனநாயக முறையில் மாற்றியமைக்க வேண்டும். வடக்கு கிழக்கு உள்ளிட்ட சகல பகுதிகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும்.

ஆளுநர் மூலமாக ஆளுகைகளை கையாள்வது ஜனநாயக செயற்பாடு அல்ல. மாகாணசபை உறுப்பினர்களின் மூலமாகவே அதனை கையாள முடியும்.

மக்களுக்கான சேவையை மாகாணசபைகளின் மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் மூலமாகவே கையாள முடியும் என்றும் கூறினார். (ம-3)




**கொவிசெத**
திகதி 2019.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 2077
ஆங்கில எழுத்து F | வெல்லப்பட்ட இலக்கங்கள் 22 31 70 77
தேசிய லொத்தர் சபை

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1537 திகதி 2019/03/28
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 02 03 49 61
0277980
தேசிய லொத்தர் சபை

**நீரோகா**
திகதி 2019/03/28
சீட்டிழுப்பு இலக்கம் 530
லக்கினம் கன்னி | வெற்றி இலக்கங்கள் 01 08 33 47
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2019/03/28
சீட்டிழுப்பு இலக்கம் 3885
ஆங்கில எழுத்து J | வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 3 5 8 9 7
தேசிய லொத்தர் சபை

## யாழ்ப்பாண மாவ...

தேக்கக் கூடிய அந்தணத்திடல் பாரிய நீர் பாசனக் குளத்தில் கட்டுமானப்பணிகள் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஏறக்குறைய 6 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான 18.25 மில்லியன் கன மீற்றர் நீரைப் பெறுவதற்காக இங்கிலாந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான குக னேஸ்வரராஜா சிந்தனையில் இத்திட்டம் உரு வாக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலகம், மருதங்கேணி பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம், கர வெட்டி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிர தேச செயலகம், பளை பிரதேச செயலகம் ஆகிய 6 பிரதேச செயலகங்களை உள்ளடக்கி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சாவகச்சேரி – பருத்தித்துறை வீதியின் 6–9 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் உப்பாறையும் இணைத்து அந்தணத்திடலில் ஏறக்குறைய 6 சதுர கிலோ மீற்றர் பரப்பள வையுடைய பகுதியில் இக்குளம் அமையவு ள்ளது.

யாழ் மாவட்டத்தில் வருடம் தோறும் கிடைக் கப்பெறுகின்ற சராசரி மழை வீழ்ச்சியான ஆயிரத்து 250 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி யில் 30 வீதம் கடலை சென்றடைவதோடு 50 வீதம் சூரிய வெப்பத்தினால் ஆவியாவ துடன் 20 வீதம் நிலத்தடிக்கு செல்கிறது. இச் செயன்முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவ தற்காக வடமராட்சி நீரேரியின் மூலம் நன்னீ ரைக் குடிநீராக்குவதற்காக தொண்டைமா னாறு கோயிலுக்கு அருகாமையில் கடல்நீர் தடுப்பணையையும் நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் தடுப்பணையும் அமைத்ததன் மூலம் நன்னீருடன் உவர்நீர் கலப்பதை தடுக்க முடிந்தது.

வடமராட்சி நீரேந்துப் பகுதியில் 6 பிரதேச செயலகம் உள்ள ஏறக்குறைய 330 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய பகுதியில் இரு ந்து 300 மில்லியன் கனமீற்றர் மழை நீர் கிடைக்கிறது. அது மட்டுமல்லாமல் வடமராட்சி நீரேந்துப் பகுதியில் நேரடியாக 94 மில்லியன் கனமீற்றர் மழை நீர் கிடைக்கப்பெறுகின்றது.

இவ்நீரினைப் பயன்படுத்தி அமைக்கப் படும் குளத்தில் அணைக்கட்டு 25 அடியாக வும் நீர் கொள்ளளவு (4.5 மீற்றர்) 15 அடியாக வும் அமைக்கப்படவுள்ளது. எனவே யாழ் மாவட்ட குடிநீர் தேவையை நிறைவாக்குதற் காக ஏற்படுத்தப்பட்ட இத்திட்டம் அடுத்த (2020 ஆம் ஆண்டு) இறுதியில் நிறைவு செய்வதற்காக ஓய்வுபெற்ற நீர்ப்பாசன சிரே ஷ்ட பொறியியலாளர் எஸ்.குணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் மத்திய நீர்ப்பாசனத் திணைக் களத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டம் தொடர்பில் யாழ். மாவட்ட நீர்ப் பாசன பொறியியலாளர் எஸ்.சர்வராஜா மேல திக விளக்கங்களை வழங்கினார். (ம-3-10)

## வடக்கின் முதலா...

மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக நடத்தப்ப டும் வடமாகாண பௌத்த மாநாடு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளதோடு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் கீழ் புத்தசாசன அமைச்சு, பிரதேச அரசியல் தலைவர்கள், முப்படையி னர் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முழுமையான பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது.

வவுனியா ஸ்ரீபோதி தட்சிணாராம விகா ரையில் இன்று காலை 8.15க்கு சமய வழி பாடுகளின் பின்னர் பல்வேறு கலாசார நிக ழ்வுகளுடனான மத அனுஷ்டானங்களோடு பௌத்த தேரர்கள் மண்டபத்திற்கு வரவேற் கப்பட்டு சமயவழிபாடுகளின் பின்பு சர்வ மத தலைவர்களின் ஆசிவழங்கப்பட்டு இவ் வட மாகாண பௌத்த மாநாடு ஆரம்பிக்கப்படவு ள்ளது. போரால் உயிர் நீத்த மக்களுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இதன்போது நடைபெறவுள்ளது.

பிற்பகல், வடமாகாண மத நல்லிணக்க த்தை மேம்படுத்துவதற்காக எடுக்க வேண் டிய நடவடிக்கைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் கலந்துரையாடப்படவுள்ள துடன் வடமாகாணத்தில் நடைபெறும் இந்த பௌத்த மாநாட்டினால் இலங்கையர்கள் மற் றும் உலக மக்களுக்கு நற்செய்தி வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த புண்ணிய செயற்பாட்டினை உலக மக்களுக்கு ஒளிபரப்பு செய்வதற்கு அனை த்து ஊடகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஊடகவியலாளர்கள் வவுனியாவுக்கு வருகை தந்துள்ளனர் என்றுள்ளது. (ம-3)

## திருக்கேதீஸ்வர...

காலை மன்னாரில் இந்து மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று காலை மன் னார் மாவட்டச் செயலக பிரதான வீதியில் இடம்பெற்றது. காலை 8.30 மணியளவில் ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன் ஒன்று கூடிய மக்கள் மன்னார் மாவட்டச் செயலக பிரதான வீதிக்குச் சென்றனர்.

பின்னர் அங்கு வீதியின் இரு பகுதிகளி லும் பல நூற்றுக்கணக்கான இந்து மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைக ளையும், நந்திக் கொடியினையும் கையில் ஏந்தியவாறு அமைதியான முறையில் கவன யீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேர வையின் தலைவர் தர்மகுமார குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கவனயீர் ப்பு போராட்டத்தில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையினர், இந்து மத குருமார் கள், இந்துக்கள் என பல நூற்றுக்கணக்கான வர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தின் இறு தியில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன் றாஜிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவை மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவை யின் செயலாளரினால் கையளிக்கப்பட்டது.

இதன்போது அந்த மனுவைப் பெற்றுக் கொண்ட மாவட்ட அரச அதிபர் அதனை உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்ப தாக தெரிவித்தார்.

இந்த நிலையில், கவனயீர்ப்பு போராட்டத் தில் ஈடுபட்ட மக்கள் மீண்டும் ஆலடிப்பிள் ளையார் ஆலயம் நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

கடந்த சிவராத்திரி தினத்தன்று திருக்கே தீஸ்வர ஆலயத்தின் அலங்கார வளைவு உடைக்கப்பட்டு அகற்றப்பட்டது. அந்தப் பகுதி யைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் அதனை அப் புறப்படுத்தியிருந்தனர். அதனைக் கண்டித்தே இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-2-285-286)

## ஒப்பிடுகையில்...

தோற்றியவர்களில் 67.24 சதவீத மாண வர்கள் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ள னர். எனினும் கடந்த ஆண்டு 64.11 வீதமான வர்களே சித்தியடைந்துள்ளனர் என பரீட்சை கள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 2017ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியோரில் 73.05 சதவீத மாணவர்கள் க.பொ.த உயர் தரத்தில் கல்வி பயில்வதற்குத் தகுதி பெற்றனர். எனினும் கடந்த ஆண்டு 71.66 சதவீதமானோரே உயர்தரத்தைத் தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பி ட்டுள்ளது. (ம-3)

## வேம்படியில் 50...

அத்தோடு யாழ். சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் 11 மாணவர்கள் 9 ஏ சித்தியையும் 16 மாணவர்கள் 8 ஏ சித்தியையும் பெற்று ள்ளனர். (ம-3-10)

(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி)

## அமைச்...

உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் மாநகர, மேல் மாகாண அபிவிரு த்தி அமைச்சுக்க ளின் மீதான வாக் கெடுப்பு தோல்விய டைந்துள்ளது.

உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு க்கான நிதி ஒதுக்கீ ட்டு வாக்கெடுப்பில் எதிராக 38 வாக்குக ளும் ஆதரவாக 20 வாக்குகளும் கிடை க்கப் பெற்றுள்ளது.

மாநகர, மேல் மாகாண அபிவிரு த்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக் கெடுப்பில் எதிராக 38 வாக்குகளும் ஆத ரவாக 23 வாக்குக ளும் கிடைக்கப் பெற் றுள்ளது. (ம-3)


**Techno World**

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்ப பிரிவு - 2021

A/L 2018 தொழில்நுட்பபிரிவில் சித்தி பெற்ற 68 மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையுடன்

அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் Techno World மாணவர்களே...!

உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்டநிலை |
|---|---|
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.03.2019
சனிக்கிழமை காலை 8.30 மணி
நவீன ஆய்வுகூட வசதிகளுடன்...

உயிர்முறைமை தொழில்நுட்பம்

| | | | |
|---|---|---|---|
| தனுசியன் | 03 | ஜிந்துசா | 20 |
| ரிஹுயா | 04 | கலக்சன் | 22 |
| கிரிஜனா | 05 | ருத்திகா | 21 |
| கிசோரகா | 06 | கிருஸ்திகா | 23 |
| அசமா பானு | 07 | டர்சிகா | 24 |
| கம்சிகா | 07 | சதுர்ஜனா | 29 |
| நளாயினி | 07 | பவிக்சன் | 25 |
| நிலவன் | 08 | நிலாஜினி | 28 |
| கஜானி | 09 | கைசிகா | 30 |
| சுகன்யா | 11 | லவன் | 32 |
| ஜெனிற்றா | 11 | ஜெயசித்ரா | 33 |
| டனுசிகா | 11 | கிரிஸ்ரி திவ்யா | 33 |
| நிசாந்தினி | 11 | பயிசாளினி | 36 |
| கேசங்கா | 12 | நிலவழகன் | 38 |
| சுலாகி | 12 | தமிழரசி | 39 |
| யதுர்சன் | 13 | தரங்கிதா | 42 |
| வேணுயன் | 15 | பிரவீனா | 42 |
| கிசானிகா | 17 | விநோதா | 45 |
| சாருகா | 18 | பூர்விகா | 52 |
| சாரிகா | 18 | ராஜாஜி | 55 |
| பரணிகா | 20 | தசாரா | 51 |

பொறியியல் தொழில்நுட்பம்

| | |
|---|---|
| விசுராதன் | 04 |
| டக்சன் | 06 |
| நஹர்ஷன் முகமட் சர்வீன் | 06 |
| வேணுயன் | 08 |
| திவாகர் | 09 |
| போல் யேசுரட்ணம் | 10 |
| துஜீவன் | 13 |
| தமிழினியன் | 21 |
| ஜிந்துசன் | 25 |
| ஜனிஸ்ரன் | 27 |
| கோகுலன் | 29 |
| கஜந்தன் | 34 |
| துசியந்தன் | 35 |
| டிலக்சன் | 41 |
| விஜித் | 43 |
| கொலின் | 46 |
| ஜோன் கில்டன் | 52 |
| ததுர்சாயினி | 56 |

(C-5909)

தொழில்நுட்ப பிரிவில் இவ்வருடம் அதிகளவு மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு தனியார் கல்வி நிலையம்

கிளைகள் : யாழ்ப்பாணம், புத்தூர் (சோமஸ்கந்தா அருகாமை)

077 017 5346, 077 170 3549



உணவகம் ஒன்றுக்கு வேலையாள் தேவை

உணவு பரிமாறுபவர்
(பெண்கள் மட்டும்)

077 465 2860

(8268)



**NEC**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.

A/L 2021

கலை, வர்த்தகம்

புதிய பிரிவு ஆரம்பம்
30.03.2019 சனி 8.00 மணி

(C-5911)



நெல்லியடியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

யாழ்ப்பாணக் கல்லூரி, வடமராட்சி- அனுபவம் வாய்ந்த வளவாளர்களால் எல்லாப் பாட விடயங்களும் கற்பிக்கப்படும்.

வட மாகாண வரிமதிப் பீட்டாளர் விசேட வகுப்புகளும்

பொது அறிவு
வியாழக்கிழமை / வெள்ளிக்கிழமை
பிற்பகல் 5.00 - 7.00 மணி
பொது உளச்சார்பு: சனிக்கிழமை
பிற்பகல் 4.00 - 7.00
T.தவசேகர்
மொழித்திறன்: ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 - 12.00 மணி

இடம்: உயர் கல்லூரி, நெல்லியடி.
HNB Assurance (கட்டிடம் மேல்மாடி)
தொடர்பு: 077 435 0958

(8231)



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 50மீற்றர் ஆஸ்பத்திரி வீதியில்)

பிரதி சனிக்கிழமைகளில்

வரிமதிப்பீட்டாளர் 9.00 - 3.00
பதிவாளர் open 10.00 - 4.00
பதிவாளர் Limited 1.00 - 4.00
புள்ளிவிபரவியலாளர் 10.00 - 2.30
சட்டமாணி நுழைவு 10.00 - 2.30
முகாமைத்துவ உதவியாளர் 10.00 - 2.30
வருமானப் பரிசோதகர் 10.00 - 2.30

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

SLAS Open, Limited 9.00 - 4.00
SLEAS Open, Limited 9.00 - 3.00
ஆசிரியர் தெரிவு 9.00 - 3.00
முகாமைத்துவ உதவியாளர் Open, Limited 10.00 - 2.30
வருமானப்பரிசோதகர் 10.00 - 2.30
வரி மதிப்பீட்டாளர் 9.00 - 3.00

சகல பரீட்சைகளுக்குமான சகல வினாத் தாள்களுக்கும் உரிய விடயங்கள் வழங்கப்படும்

076 688 3394



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-5906)



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS



கவலை வேண்டாம் எதிர்பாருங்கள்...

01.04.2019
8.00 - 2.30 மணி

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.

(C-5903)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.